




Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 194 குரோதி வருடம், பங்குனி மாதம் 06 ஆம் திகதி வியாழக்கிழமை
(20.03.2025) ஹிஜ்ரி 1446, ரமழான் - 19, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12










பக்கம் 03

30 நாட்கள் அமுலுக்கு வரும்...
**ரஷ்ய - உக்ரைன் போர் நிறுத்தம்**



பக்கம் 10

**சம்பியன்ஸ் கிண்ணம் மூலம் 10 கோடி டொலரை இழந்துள்ள PCB**

CHAMPIONS ICC TROPHY 2025 • PAK

பக்கம் 12

# தேசபந்து சரணாகதி!

## இன்றுவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவு

நா. தினுஷா

பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள தேசபந்து தென்னக்கோன், நேற்று (19) காலை அவரது சட்டத்தரணிகளுடன் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்தார். அவர் சரணடைந்ததன் பின்னர் அவரை இன்று (20) வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டு 20 நாட்களின் பின்னர் அவர் இவ்வாறு நீதிமன்றில் சரணடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

2023ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டின் பின்னர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பொலிஸ் அதிகாரியொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், அப்போதைய பதில் பொலிஸ் மா அதிபராக இருந்த தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் 08 பேரை கைதுசெய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

» 02பக்கம்



## தேசபந்து வீட்டில் 1009 மதுபான போத்தல்கள்!

### துப்பாக்கியும் மீட்கப்பட்டதாக அமைச்சர் ஆனந்த அறிவிப்பு

தேடப்பட்டுவந்த முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஹோக்கந்தர பகுதியிலுள்ள வீட்டை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் சோதனையிட்டபோது 1009 மதுபானப் போத்தல்கள், ஒரு துப்பாக்கி, இரண்டு அப்பிள் ரக கையடக்கத் தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) விசேட கூற்றை முன்வைத்தபோதே இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

''வெலிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுற்றுலா ஹோட்டலில் 2023.12.31ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட 06 பேரை கைதுசெய்வதற்கு மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு தொடர்பில் நாட்டு மக்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் சொத்துகளை அரசுடைமையாக்குவது தொடர்பில் மாத்தறை நீதவான் நீதிமன்றத்துக்கு விடயங்களை முன்வைப்பதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் இன்று (நேற்று) மாத்தறை நீதவான் நீதிமன்றத்துக்கு சென்றிருந்தனர்.

இந்நிலையில், தேசபந்து தென்னக்கோன் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார். தேடப்பட்டுவந்த முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து...

» 02 பக்கம்

## இனப்படுகொலை குறித்தும் விவாதம் நடத்த வேண்டும்

### சபையில் கோரினார் சிறிதரன்



''பட்டலந்த என்ற சொல்லில் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான இனப்படுகொலையை மறைத்துவிட வேண்டாம். தமிழர் மீது நடத்தப்பட்டது இனப்படுகொலையல்ல என வாதிடும் நீங்கள் பட்டலந்த படுகொலை தொடர்பில் பேசுவதற்கு தயாராகின்றீர்கள். நாங்கள் அதனை எதிர்க்கவில்லை. விசாரணை வேண்டும். யார் அநியாயமாக கொல்லப்பட்டார்களோ, யார் நீதியின் கண்களுக்கு முன்னால் சித்திரவதை செய்யப்பட்டார்களோ அவர்களுக்கு நீதி வேண்டும் என்பதை நாங்கள் தமிழர்களாக வலி உணர்ந்த மக்களாக வரவேற்கின்றோம்.

» 02 பக்கம்

## அர்ச்சுனாவுக்கு ஆப்பு; சபாநாயகர் அறிவிப்பு

யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. சபாநாயகர் இது தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை நேற்று (19) பாராளுமன்றத்தில் விடுத்தார். அதில் அவர் கூறியதாவது,

''பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) இராமநாதன் அர்ச்சுனா, இந்தச் சபையிலும் சபைக்கு வெளியிலும் குறிப்பாக, சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி தனிநபர்களுக்கும் தனிநபர் குழுக்களுக்கும் மற்றும் பலதரப்பட்ட அமைப்புகளுக்கும் எதிராக மிகவும் இழிவான...

» 02 பக்கம்



### கமெண்ட் கந்தர்...



தேசபந்து ஐயாவும் பொருளாதார ரீதியா கஷ்டப்பட்டிருக்கிறார் பாருங்கோ... பார்ட் டைம் வியாபாரமும் செய்திருக்கிறார்...

## பண்டிகைக் காலத்தில் விசேட உணவுப்பொதி

### 2,500 ரூபா என்கிறார் அமைச்சர் வசந்த



''பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக 5,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய பொதி 2,500 ரூபாவுக்கு வழங்கப்படும்'' என வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் வர்த்தக, வாணிப,..

» 02 பக்கம்

## மஹிந்தவின் அடிப்படை உரிமை மீறல் மனு நிராகரிப்பு

தொடர்ச்சியாக பயங்கரவாத அச்சுறுத்தலுக்குள்ளாகி வரும் தனக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், அந்தப் பாதுகாப்பை மீண்டும் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கத்துக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையை உயர்நீதிமன்றம் நேற்று (19) நிராகரித்துள்ளது.



» 02 பக்கம்

## உள்ளூராட்சித் தேர்தல் திகதி அறிவிப்பு இன்று

### பேரணிகளுக்குத் தடை ; 27வரை பிரசாரங்களுக்கு வரையறை




உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் இன்று (20) நண்பகலுடன் நிறைவடைவதுடன், தேர்தலுக்கான திகதி தேர்தல் ஆணைக்குழுவினால் இன்று அல்லது எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கமைய, இன்று பிற்பகல் 1.30 க்குப் பின்னர் சுயேச்சைக் குழுக்களுக்கான சின்னங்கள் அறிவிக்கப்படவுள்ளதுடன், பேரணிகள், வாகனப் பேரணி களை அல்லது ஒன்றுகூடல்களை...

» 02 பக்கம்

### உஷ்



**தலைமறைவாகியிருந்த முன்னாள் பொலிஸ் மா அதிபர் தனது பெயரில் எந்த சொத்துக்களையும் வைத்திருக்கவில்லையாம். ஆனால் பினாமியின் பெயரில் 8 வீடுகளை வைத்துள்ளமை தெரியவந்துள்ளதாம். அதேபோல் அதிசொகுசு காரில்தான் நீதிமன்றத்தில் சரணடையவும் வந்தாராம். இவையெல்லாம் அவருக்கு எப்படி கிடைத்ததென்று தேடுகிறதாம் பொலிஸ்.**

## பூனைக்குட்டிபோல் மன்றுக்கு வந்தால் பிணை கிடைக்குமென நினைப்போ?

### மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் நீதிமன்றத்தில் காட்டம்



இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக கடும் விமர்சனத்தை முன்வைத்துள்ள மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், தேசபந்து தென்னக்கோனை திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவின் தலைவருக்கு சமமானவர் என்று நீதிமன்றத்தில் அறிவித்திருக்கிறார். சந்தேகநபராக தேசபந்து தென்னக்கோன் நீதிமன்றத்துக்கு ஆஜரான விதம் தொடர்பிலும் கடும் எதிர்ப்பை முன்வைத்துள்ளார். தேசபந்து தென்னக்கோன் நேற்று (19) மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில்...

» 02 பக்கம்



## உள்ளூராட்சித்...

நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் 27ஆம் திகதி வரை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை இடம்பெறவுள்ளதால் பரீட்சார்த்திகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பிரசாரம் செய்யவேண்டாம் எனவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான கட்டுப் பணத்தைக் கையேற்றல் நடவடிக்கை கடந்த 03ஆம் திகதி ஆரம்பமாகியிருந்த நிலையில், கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று (19) நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

இதேவேளை, வேட்புமனுக்களைக் கையேற்கும் பணிகள் கடந்த 17ஆம் திகதி ஆரம்பமாகியிருந்த துடன், வேட்புமனுக்களைக் கையேற்கும் பணிகள் இன்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைகின்றன. அதற்கமைய, பெயர்குறித்த வேட்புமனுக்களை அந்தந்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஒப்படைக்க முடியும்.

இன்று வேட்புமனுக்களைக் கையேற்கும் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் பகல் ஒரு மணிமுதல் 1.30 மணிவரை ஆட்சேபனை தெரிவிக்க முடியும். அதேபோன்று 1.30 மணியின் பின்னர் முன்வைக்கப்பட்ட வேட்புமனுக்களில் நிராகரிக்கப்பட்ட மற்றும் ஏற்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பாக தெரிவத்தாட்சி அதிகாரிகள் அறிவிப்பார்கள். அதனைத் தொடர்ந்தே சுயேச்சை குழுக்களுக்கான சின்னங்கள் தெரிவுசெய்யப்படும்.

குறிப்பாக, எதிர்வரும் 27ஆம் திகதிவரை சாதாரண தரப் பரீட்சை இடம்பெறவுள்ளதால், வேட்புமனுத் தாக்கல் இடம்பெறும் காலப்பகுதியிலும் அதன் பின்னரான காலப்பகுதியிலும் பரீட்சார்த்திகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பணியாற்ற வேண்டும்.

இன்று நண்பகல் 12 மணியின் பின்னர் பேரணிகள், வாகனப் பேரணிகள் அல்லது ஒன்றுகூடல்களை நடத்துவதற்குச் சட்டத்தில் அனுமதி வழங்கப்படவில்லை. இந்த விடயங்கள் தொடர்பில் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்துமாறு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வேட்பாளர்கள் செயற்படுவது அவசியமாகும். 26ஆம் திகதிவரை பரீட்சை மத்திய நிலையங்களுக்கு அருகில் பிரசாரம் செய்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். முதலில் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்ட 336 உள்ளூராட்சி சபைகளுக்கப்பால், அதன் பின்னர் வேட்புமனுத் தாக்கலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட 03 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் 24ஆம் திகதியிலிருந்து 26ஆம் திகதிவரை இடம்பெறும்''- என்றார்.

## பூனைக்குட்டிப்போல்...

ஆஜராகியிருந்த நிலையில், இதுதொடர்பான வழக்கு விசாரணை மாத்தறை நீதவான் அருண புத்ததாச முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின்போது தேசபந்து தென்னக்கோனின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சானக்க ரணசிங்க கருத்து முன்வைத்திருந்தார்.

**ஜனாதிபதி சட்டத்தரணி சானக்க ரணசிங்க :** எனது கட்சிக்காரருக்கு பிணை வழங்குவதா இல்லையா என்பது தொடர்பான உத்தரவை நீதிமன்றம் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

பிணையை நிராகரிப்பது என்றால் சந்தேகநபரொருவர் நீதிமன்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்காமல் நீதிமன்றத்தை புறக்கணித்தல் அல்லது சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். இருந்தபோதும் மேன்முறையீட்டு சட்ட உதவி நிராகரிக்கப்பட்டதன் பின்னரான முதலாவது சந்தர்ப்பத்திலேயே இந்த நீதிமன்றத்துக்கு வந்தி ருக்கிறார்.

உயர் நீதிமன்றத்தினூடாக அவருடைய பணிக்கு இடைக்கால தடைவிதிக்கப்பட்டிருந்தாலும், அவர் இன்னும் நாட்டின் பொலிஸ் மா அதிபராவார். பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டதன் பின்னர் பாதாள மற்றும் போதைப்பொருள் வியாபாரத்துக்கு எதிராக சட்டத்தின் பெயரில் யுத்தம் செய்தார். ஆதனால் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கிறது. ஒருவேளை அவருக்கு விளக்கமறியல் வழங்கப்பட்டால் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

அதன்காரணமாக ஏதாவது நிபந்தனையின் அடிப்ப டையில் எனது கட்சிக்காரரை பிணையில் விடுவிக்க வேண்டும் என்று கோருகிறேன்.

அதனைத் தொடர்ந்து முறைப்பாடு தொடர்பில் கருத்து தெரிவித்த **மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் :** பகிரங்க பிடியாணை விடுக்கப்பட்டுள்ள சந்தேகநபரொருவர் டை, கோர்ட் அணிந்துகொண்டு பென்ஸ் வகை காரில் நீதிமன்ற மண்டப கதிரையில் அமர்ந்திருப்பதாக இன்று காலை நான் அறிந்துகொண்டேன். அதன் காரணமாகவே சட்ட மா அதிபரின் சார்பில் நான் நீதிமன்றத்துக்கு வருகை தந்துள்ளேன்.

நகர்த்தல் பத்திரம் தொடர்பில் எங்களுக்கு அறிவிக் காமல் கூட திருட்டுப் பூனையை போன்று நீதிமன்றத்துக்கு வந்து பாழடைந்த வீட்டில் பானையை உடைத்து பிணை எடுத்துச் செல்ல முடியும் என்று எண்ணினாரோ தெரிய வில்லை.

பகிரங்க பிடியாணை விடுக்கப்பட்ட நபரொருவர் சாட்சிக் கூண்டுக்கு வராமல் எதற்காக கதிரையில் அமர்ந்தி ருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். குற்றம் செய்த ஒருவர் சிங்கக் குகையிலிருந்து வந்து இவ்வாறு கதிரையில் அமர்ந்திருக்க முடியாது. தொலை பேசியை ஓப் செய்துவிட்டு, இரகசிய நடவடிக்கை, ஏமாற்று வேலைசெய்து 20 நாட்கள் நீதிமன்றத்தை புறக்கணித்து தலைமறைவாகியிருந்த இவர் சிறந்த நடிகராவார். இவர் பொலிஸ் மா அதிபராக இருந்தபோது சட்டத்தரணிகளே குற்றவாளிகளை பாதுகாப்பதாக கூறியிருந்தார். அவ்வாறு கூறிய அவருக்கு இன்று சட்டத்தரணிகள் சூழ நீதிமன்றத்துக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது W-5 ஹோட்டலுக்கு துப்பாக்கிச் சூடு நடத்திய வழக்கு விசாரணை இல்லை. கர்மவினை தொடர்பான வழக்காகும். அவர் செய்த கர்மமே இந்த பிறவியிலேயே பலனை கொடுத்துள்ளது.

நீதிமன்றத்தினூடாக கடந்த மாதம் 27ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டது முதல் பிரபாகரனை தேடுவது போன்று பெரும் சேனைகளினூடாக அவரை தேடி சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. நேற்று அவரது வீட்டை சோதனைக்கு உட்படுத்திய போது அங்கிருந்து வெளிநாட்டு மதுபான போத்தல்கள் 796 கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த போத்தல்களின் பெறுமதி பல கோடி ரூபாவாகும். அது வீடல்ல. அதுவொரு களிப்பு விடுதி. எனக்கு விளக்கமறியல் வழங்க வேண்டாம் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக கூறும் அவர், அவரது கடமை துப்பாக்கியை துணியில் மறைத்துவிட்டு 20 நாட்கள் தலைமறைவாகியிருந்தார். அவரின் பெயரில் எந்தவொரு சொத்தும் இல்லாவிட்டால் இவருக்கு மாத்திரம் உத்தியோகபூர்வமற்ற 8 வீடுகள் இருக்கின்றமை உறுதியாகியுள்ளது. அதன் காரண மாகவே பாதாள குழுத் தலைவர்களான மதுஸுக்கும் அரக் கட்டாவுக்கும் இதுபோன்று சூட்சுமமாக செயலாற் றியிருக்க முடியாது என்று கூறுகிறேன்.

நாட்டின் பொலிஸ் மா அதிபர் என்று கூறிக்கொள்ளும் இவர் அல்லது அவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் பெயரில் எவரும் 2021ஆம் ஆண்டிலிருந்து வாக்காளர் இடாப்பில் இல்லை. He Is a Ghost. இவர் ஒரு மர்மமான நபர் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

## அர்ச்சுனாவுக்கு...

சொற்பதங்களைப் பிரயோகித்து மேற்கொண் டுள்ளதும் மேற்கொண்டு வருவதுமான சர்ச்சைக்குரிய மற்றும் இழிவுக்குட்படுத்தும் கூற்றுகளால், தனிப்பட்ட முறையில் பல்வேறு நபர்களுக்கும் பல்வேறு சமூக மற்றும் இனக் குழுமங்களுக்கும் மன அமைதியைக் குலைக்கும் நிலை ஏற்படுகின்றதென பல்வேறு வழிமுறைகளில் எனக்கு முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்து இந்தச் சபைக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

உறுப்பினர் (வைத்தியர்) இராமநாதன் அர்ச்சுனா, தனிப்பட்ட முறையில் பெண்கள் உட்பட பல்வேறு நபர்கள், பல்வேறு சமூக குழுக்கள் மற்றும் சமயக் குழுக்களை இலக்குவைத்து முன்வைத்துள்ள பல்தரப்பட்ட, இழிவுக்குட்படுத்துகின்றதும் அநாகரிகமானதும் அத்தோடு கடுமையான சர்ச்சைகளுக்கு வித்திடுகின்றதுமான கூற்றுகள் சம்பந்தமாக பல்வேறு நபர்கள், பல்வேறு சமூக அமைப்புகள் அதேபோல், இந்தச் சீருயர் சபையைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்கக் கட்சியையும் எதிர்க்கட்சியையும் சேர்ந்த பல மக்கள் பிரதிநிதிகள் உட்பட்ட பல்வேறு தரப்பினர் தனிப்பட்ட முறையில் என்னிடம் முறைப்பாடு செய்து அத்தகைய கூற்றுகள் சம்பந்தமாக அவர்களது கடுமையான அதிருப்தியையும் கவலையையும் வருத்தத்தையும் தெரிவித்துள்ளதோடு, இந்தச் சீருயர் சபையின் தலைவர் என்ற வகையில் அத்தகைய செயற்பாடுகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஏற்கனவே என்னிடம் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்கள் எனும் விடயத்தை இச்சபைக்கு அறியத்தர விரும்புகிறேன்.

குறிப்பாக, இந்தச் சீருயர் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் தனக்குரிய சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி, இந்தச் சபைக்கு வந்து பதிலளிக்க முடியாத தரப்பினர் சம்பந்தமாகவும் இச்சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய மக்கள் பிரதிநிதிகள் சம்பந்தமாகவும் அத்துடன், பிற பல்வேறு வெளிமட்ட சமூக மற்றும் சமய அமைப்புகள் உட்பட பல்வேறு இனக் குழுமங்களையும் இனப் பிரிவினரையும் இலக்கு வைத்து மிகவும் இழிவான சொற்பதங்களைப் பிரயோகித்து, அவர்களின் தனிப்பட்ட வாழ்வில் பாரியதொரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றதும் அபகீர்த்தியை விளைவிக்கின்றதுமான கூற்றுகளுக்கு சபாநாயகர் என்ற வகையில் தனது கடுமையான அதிருப்தியை தெரிவிக்கிறேன்.

இந்தச் சீருயர் சபையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் பிரதிநிதி என்ற வகையில், அவர் மேற்கொள்கின்ற இவ்வகையான இழிவுபடுத்தும் மற்றும் அநாகரிகமான கூற்றுகளால் சபையின் சீருயர் தன்மைக்குப் பாரிய களங்கமும் அவமதிப்பும் ஏற்படுகிறதென்பதை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். மேலும், இது தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்கும் பாரிய குந்தக நிலையை ஏற்படுத்துகின்றதென்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில், இவ்வாறான கூற்றுகளைத் தவிர்க்குமாறு பல வழிகளில் கடிந்துரைத்தபோதிலும், அந்த அறிவுறுத்தல்களை ஏற்று நடப்பதற்கு குறித்த பாராளுமன்ற உறுப்பினர் முற்றாகத் தவறியிருப்பதையும் நான் அவதானிக்கின்றேன். குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் இத்தகைய செயற்பாடுகள் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகள், பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் தொன்றுதொட்டு பேணப்பட்டு வருகின்ற தொன்மையான பாராளுமன்ற மரபுகள் ஆகியவற்றுக்கு முற்றிலும் முரணாகவும் இசைந்தொழுகாத வகையிலும் இருக்கின்றதென இங்கு விசேடமாக வலியுறுத்த விரும்புகிறேன்.

தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) இராமநாதன் அர்ச்சுனாவால் முன்வைக்கப்படும் இக்கூற்றுகள் தொடர்பாக மிக ஆழமாக ஆராய்ந்து, அவற்றைப் பரிசீலித்ததன் பின்னர் அதன்மூலம் தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்கும் ஏற்படும் அச்சுறுத்தலைக் கருத்திற்கொண்டு, நிலையியற் கட்டளை ஏற்பாடுகளின் பிரகாரம், சபாநாயகர் என்ற வகையில் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 மற்றும் 21ஆம் திகதிகளிலும் 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08, 09 மற்றும் 10ஆம் திகதிகளிலும் 2025ஆம் ஆண்டு மே மாதம் 06, 07 மற்றும் 08ஆம் திகதிகளிலும் என மொத்தமாக எட்டு (08) நாட்கள் நடைபெறவுள்ள பாராளுமன்ற அமர்வுகளின்போது, பாராளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) இராமநாதன் அர்ச்சுனாவின் எந்தவொரு கூற்றையும் செவிப்புல, கட்புல மற்றும் சமூக ஊடகங்களில் நேரடியாக ஒலி / ஒளிபரப்புச் செய்வதை இடைநிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மேலும், சந்தர்ப்பத்துக்கேற்ப அவ்வாறான இழிவுக்குட்படுத்தும், அநாகரிகமான மற்றும் கீழ்த்தரமான சொற்பதங்களைப் பிரயோகித்து, உறுப்பினரால் தெரிவிக்கப்படும் அனைத்து கூற்றுகளையும் ஹன்சாட் அறிக்கையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுமென இந்தச் சீருயர் சபைக்கு அறியத்தர விரும்புகிறேன். அத்துடன், இவ்வாறு நேரடி ஒலி / ஒளிபரப்பை இடைநிறுத்துவதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளும் காலப் பகுதியில், உறுப்பினர் ஆற்றும் உரைகளின் உள்ளடக்கம் மற்றும் தெரிவிக்கப்படும் கூற்றுகள் சம்பந்தமாக ஆராய்ந்து, இத்தற்காலிகத் தடையை நீக்குவது தொடர்பாக பரிசீலிக்கப்படும்'' - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மஹிந்தவின்...

இருதரப்பு சட்டத்தரணிகளாலும் முன்வைக் கப்பட்ட நீண்ட வாதப்பிரதிவாதங்களை கவனத்திற் கொண்டதன் பின்னர் உயர்நீதிமன்றத்தால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவானது, உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரீதி பத்மன் சூரசேன, மஹிந்த சமயவர்தன மற்றும் அச்சல வெங்கபுலி ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாமால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

## தேசபந்து வீட்டில்...

தென்னக்கோனின் ஹோக்கந்தர பகுதியிலுள்ள வீட்டை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் செவ்வாய்க்கிழமை சோதனையிட்டபோது வெளிநாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட 795 மதுபானப் போத்தல்கள், 214 வைன் போத்தல்கள் உட்பட 1009 மதுபானப் போத்தல்களை குற்றப்புலனாய்வு அதிகாரிகள் கைப்பற்றினர்.

அதேபோல், தேசபந்து தென்னக்கோன் பயன்படுத்தியதாகக் கருதப்படும் துப்பாக்கி ஒன்றும் இரண்டு அப்பிள் ரக கையடக்க தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடவுள்ளோம்''- என்றார்.

## பண்டிகைக்...

உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

''புத்தாண்டு காலத்தை முன்னிட்டு லங்கா சதொச விற்பனை நிலையங்களூடாக அத்தியாவசிய உணவுப் பொதிகளை நிவாரண விலைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக வரவு - செலவுத் திட்டத்தில் 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவுகள் தொடர்பான குழுவின் பரிந்துரைகளுக்கமைய, இந்த ஒதுக்கீட்டை 1,500 மில்லியன் ரூபாவாக மாற்றியமைக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இதற்கான திருத்தம் நாளை (இன்று வியாழக்கிழமை) நிதியமைச்சின் குழுநிலை விவாதத்தில் முன்வைக்கப்படும். 17 இலட்சம் பேர் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு பெறுகிறார்கள். 8,70,000 பேர் நலன்புரி கொடுப்பனவுக்குப் புதிதாக விண்ணப்பித்துள்ளார்கள். சதொச விற்பனை நிலையங்களூடாக 5,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப்பொதி 2,500 ரூபா நிவாரண விலைக்கு வழங்கப்படும்.

இந்த நிவாரணப் பொதியில் நாடு அரிசி 05 கிலோ, பெரிய வெங்காயம் 02 கிலோ, உருளைக்கிழங்கு 02 கிலோ, பருப்பு ஒரு கிலோ, டின் மீன் ஒன்று, சிவப்பு சீனி 03 கிலோ, கோதுமை மா 02 கிலோ, சமபோஷா 02 பெக்கட், 04 சோயா மீட் பெக்கட் உள்ளடக்கப்படும்.

நிவாரணப்பொதி வழங்குவதற்கு உரிய விநியோகஸ்தர்களிடமிருந்து விலைமனுக்கோரல் செய்யப்பட்டுள்ளது. திறைசேரியிடம் முற்பணம் கோரியுள்ளோம். இந்த நிவாரணப்பொதி வழங்கலில் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்காக புதிதாக விண்ணப்பித்துள்ள 8,70,000 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது'' - என்றார்.

## தேசபந்து...

அதனைத் தொடர்ந்து, தன்னை கைதுசெய்வதற்கு மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை நீக்குவதற்கான இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி தேசபந்து தென்னக்கோனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு கடந்த 12ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கமைய, குறித்த மனு மீதான தீர்ப்பு திங்கட்கிழமை (17) வெளியிடப்பட்டதுடன், விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்பாகவே அந்த மனுவை நிராகரித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதேபோன்று தேசபந்து தொன்னக்கோனை உடனடியாக கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

அதனடிப்படையில், தேசபந்து தென்னக்கோனை தேடி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட குழுக்கள் தொடர் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், நேற்று முன்தினம் (18) மாலை ஹோக்கந்தர பிரதேசத்தில் அமைந்துள்ள அவரது வீடு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டிருந்தது. அதன்போது அவரது வீட்டிலிருந்து ஒருதொகை வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அவை நேற்று முன்தினம் இரவு அத்துருகிரிய பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை, குற்றப்புலனாய்வுத் திணைக் களத்தில் அதிகாரிகள் அடங்கிய விசாரணைக் குழுவொன்று அவரின் சொத்துகளை அரச உடைமையாக்குவதற்கான உத்தரவைப் பெற்றுக் கொள்வதற்கு மாத்தறை நீதவான் நீதிமன்றத் தினூடாக நேற்று நடவடிக்கை எடுத்திருந்தது. இந்தப் பின்னணியிலேயே தேசபந்து தென்னக்கோன் நீதிமன்றத்தில் நேற்றுக் காலை சரணடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இனப்படுகொலை...

அதேநேரம், தமிழ் மக்கள் மீது 1956ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தம் வரை நடந்த இனப்படுகொலைகள் தொடர்பில் நீங்கள் விவாதம் நடத்தவேண்டும். விசாரணை செய்யவேண்டும், நீதி வழங்க வேண்டும்'' - என தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பி. சிவஞானம் சிறிதரன் வலியுறுத்தினார்.

பட்டலந்தை மட்டுமல்ல, இந்த நாட்டில் வடக்கு, கிழக்கில் பல பகுதிகளில் வதை முகாம்கள் உள்ளன. தமிழர் வாழும் பிரதேசங்களில் நீங்கள் மண்ணைத் தோண்டினால் அங்கு தமிழரின் மனித எலும்புக்கூடுகளைக் காணும் பிரதேசங்களாக மாறியுள்ளன. நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள். நாங்கள் இந்த மண்ணில் அழிக்கப்பட்ட தனி தேசிய இனம். நாங்கள் கேட்பது நீதி, அந்த நீதி நியாயமானதாக இருக்கவேண்டும். சர்வதேச விசாரணைக்குட்பட்டதாகவும் மனிதநேயத்துக்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பளித்தவையாகவும் இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை(19) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய சிறிதரன் எம்.பி. மேலும் பேசுகையில்,

''பட்டலந்த வதை முகாம் தொடர்பான செய்திகள் மிகப் பரவலாக வெளிவருகின்றன. பட்டலந்த என்பது 1988, 1989ஆம் ஆண்டுகளில் இந்த நாட்டிலிருந்த ஜே.வி.பி. போராளிகளைக் கைதுசெய்து கொண்டுசென்று அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டதுடன், படுகொலை செய்யப்பட்டனர் என்பதற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கை இவ்வளவு காலமும் கிடப்பிலிருந்து, இப்போது அல்ஜசீராவுக்கு ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பேட்டிக்குப் பின்னர் அந்த அறிக்கை வெளியில் வந்துள்ளது. ஆனால், 88/89இல் நடந்த ஜே.வி.பி. மீதான படுகொலைகள் தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ ஐ.நாவில் அறிக்கையொன்றையும் சமர்ப்பித்துள்ளார். ஜே.வி.பி. மீதான படுகொலைகள் தொடர்பான செய்தியை அவர் அங்கு கொண்டுசென்றிருந்தார். ஆனால் அந்தக் காலத்தில் இதற்கான தீர்வுகள் எட்டப்படவில்லை.

ஜே.வி.பி. அடுத்து வந்த ஆண்டுகளில் சந்திரிகாவுடன் இணைந்து ஆட்சிசெய்தபோதும் பட்டலந்த படுகொலைகள் தொடர்பில் எவ்வித கோரிக்கைகளையும் விடுக்கவில்லை. அது ஏன் என்று தெரியவில்லை. அந்த விடயத்தை இப்போது கையிலெடுத்திருப்பது நியாயமானது. இது தொடர்பில் விசாரணை வேண்டும்.

நாட்டில் படுகொலை செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு நீதி வேண்டும். கதிர்காமத்து அழகி மனம்பேரியை சொந்த சகோதர இராணுவத்தினரே நிர்வாணமாக்கி படுகொலை செய்தார்கள் என்பது உலக வரலாற்றில் மிக கேவலமான பதிவாக உள்ளது. அவ்வாறான இந்த நாட்டில் அதற்கு நீதி வேண்டும் என்று நான் பல தடவைகள் கூறியுள்ளேன்.

அதேபோன்று தமிழ்த் தேசிய இனம் சார்ந்த இசைப்பிரியா, கிருஷாந்தி போன்றோர் பாலியல் வன்புணர்வுக்குப் பின்னர் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களுக்கான நீதி விசாரணைகளையும் நாங்கள் பல இடங்களில் கோருகின்றோம். தமிழர்களுக்கு நடந்தது மிகப்பெரிய இனப்படுகொலை. ஆனால், சிங்கள மக்களுக்கு அவர்களின் எழுச்சி, கிளர்ச்சிகளுக்கு எதிராக இந்த வதைமுகாம்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பல ஆண்டுகளில் தமிழர்கள் மீது படிப்படியாக பல இடங்களில் படுகொலை முயற்சிகள் இடம்பெற்றன.

குறிப்பாக, 1956 - 1958 காலப்பகுதியில் இலங்கையில் தமிழினம் மீது நடந்த மிகப்பெரிய இனப்படுகொலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று 1970, 1976 காலப்பகுதியில் நடந்த மிகப்பெரிய இனப்படுகொலைகளும் பதிவாகியுள்ளன. அத்துடன் 1983இல் நடந்த ஜூலை படுகொலை மிகப்பெரிய இனப்படுகொலையாக உலகரங்கில் பார்க்கப்படுகின்றது. அதன்பின்னர் 2006இல் வாகரையில் நடந்த இனப்படுகொலை, 2009இல் முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதி இனப்படுகொலை என்பன இந்த நாட்டில் மிகவும் முக்கியமானவையே. இதற்கான விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை.

நாங்கள் பாதிக்கப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட ஓர் இனம். உணவுகூட அனுப்பாமல் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 04 இலட்சத்து 20ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இறுதி யுத்தம் நடைபெறும்போது, முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு பகுதியில் இருந்தனர். ஆனால், 70 ஆயிரம் பேரே இருக்கின்றனர் என்று அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கூறி, 70ஆயிரம் பேருக்கான உணவுப்பொருட்களையே அனுப்பினர். இதில் எத்தனை பேர் பட்டினியால் கொல்லப்பட்டிருப்பார்கள். இது தமிழ்த் தேசிய இனம் மீதான மிகப்பெரிய இனப்படுகொலையாக இந்த உலகத்தால் பார்க்கப்படுகின்றது.

கனடா நாடு இந்த விடயத்தில் தனது கரிசனையைக்கொண்டுள்ளது. அங்குள்ள இரண்டு கட்சிகள் இங்கு நடந்தவை இனப்படுகொலை என்று ஏற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளன. சர்வதேச அடிப்படையில் இந்த விடயம் பேசப்படுகின்றது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வுகளில் இலங்கை விடயங்கள் பேசப்படுகின்றன.

ஆனால், இங்கு நடைபெற்றது இனப்படுகொலை அல்ல என வாதிடுகின்றீர்கள். அதுபற்றி பேசுவதில்லை. பட்டலந்த படுகொலை தொடர்பில் பேசுவதற்குத் தயாராகின்றீர்கள். நாங்கள் அதனை எதிர்க்கவில்லை. விசாரணை வேண்டும். யார் அநியாயமாக கொல்லப்பட்டார்களோ, யார் நீதியின் கண்களுக்கு முன்னால் சித்திரவதை செய்யப்பட்டார்களோ அவர்களுக்கு நீதி வேண்டும் என்பதை நாங்கள் தமிழர்களாக வலி உணர்ந்த மக்களாக வரவேற்கின்றோம்.

அதேநேரம், தமிழர்களுக்கு நடந்த இனப்படுகொலை தொடர்பில், தமிழ்த் தேசிய இனத்தின் மீதான படுகொலை தொடர்பில் ஏன் இந்த அரசால் சரியான முடிவை எடுக்க முடியவில்லை. 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மனித உரிமைகள் பேரவையில் நீங்கள் எடுக்கும் முடிவுகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றோம். சர்வதேச நீதியாளர்களின் ஆலோசனைகளைப் பெறுகின்றோம், தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்கின்றோம், தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு நீதி காண்பதற்கு கலப்பு பொறிமுறையைக் கையாளுகின்றோம் என்று ஏற்றுக்கொண்டார்.

ஓர் அரசாங்கம் இருக்கும்போது ஏற்றுக் கொண்டதை கோட்டாபய வந்ததும் நிராகரித்தார். இந்த அரசாங்கமும் வந்தபோது இதனை எதிர்த்து நிராகரித்துள்ளது. நாங்கள் இந்த மண்ணில் உங்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு விரும்புகின்றோம். இதனை நாங்கள் பல தடவைகள் பதிவுசெய்துள்ளோம். ஆனால், நீங்கள் நீங்களாகவும் நாங்கள் நாங்களாகவும் எங்களுடைய தனித்துவங்கள், அடையாளங்கள் நிராகரிக்கப்படாமல் வாழ்வதற்கான உரிமைகள் இந்த மண்ணில் இருக்கவேண்டும். அது சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வாகத்தான் அமைய முடியும்.

ஒற்றையாட்சி இலங்கைக்குள் இந்தத் தீர்வு ஓர் இனத்தை இன்னுமொரு இனம் சுரண்ட முடியாமல், கபளீகரம் செய்ய முடியாமல் மற்றும் அடக்காமல் இருப்பதற்கான வழிமுறை ஒற்றையாட்சிக்குள் உருவாக முடியாது. ஆனால், ஒரு நாடாக இருப்பதற்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வென்பது, அந்த நாட்டில் வாழும் பல்தேசிய இனங்களை அரவணைத்துச் செல்வதற்கான மிகப்பெரிய பாதையாக மாறும்.

பட்டலந்த வதைமுகாம் எல்லோருடைய இரத்தத்தையும் உறைய வைத்துள்ளது. அங்கு நடந்தது குற்றமென்றால் அது நிரூபிக்கப்படவும் உரியவர்கள் கைது செய்யப்படவும் தண்டிக்கப்படவும் வேண்டும் என்பதில் எங்களுக்கு மாற்றுக்கருத்து இல்லை. அதேபோன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதை ஏன் விசாரணை செய்யத் தயங்குகின்றீர்கள்? அத்துடன், நாகர் கோயிலில் நடந்த படுகொலைகள், மண்டைதீவில் கொல்லப்பட்ட மக்கள் தொடர்பில் ஏன் நீங்கள் சிந்திக்கத் தவறுகின்றீர்கள்? குமுதினி படகில் கொல்லப்பட்ட மக்களுக்கு என்ன நீதி கிடைத்துள்ளது? குருநகர் கடலில் கொல்லப்பட்டவர்களுக்கு, கொக்கட்டிச்சோலையில் கொல்லப்பட்டவர் களுக்கு, வாகரையில் கொல்லப்பட்டவர்களுக்கு, திருகோணமலையில் கொல்லப்பட்டவர்களுக்கு என்ன நீதி கிடைத்துள்ளது? நெடுங்கேணி ஒலுமடுவில், அம்பாறை மாவட்டத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு என்ன நீதி கிடைத்தது? கொத்துக்கொத்தாக பல இடங்களில் கொல்லப்பட்டு அழிக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் நிலங்களை இழந்துள்ளது. இன்னும் தமது சொந்த இடங்களுக்கு போக முடியாமல் மக்கள் இருக்கின்றனர். பௌத்த தேவாலயங்கள் அமைக்கப்படுகின்றன. அந்தப் பிரதேசங்களின் காணிகளை பௌத்த இடங்களுக்குரிய காணி என்று கூறுகின்றனர். இன்னும் காணிகள் எடுக்கப்படுகின்றன. நாட்டின் நீதி என்ன, நீதி எவ்வாறு கிடைக்கும்?

யாழ். செம்மணி சுடலையில் மனித எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன. அதற்கான நீதி இன்னும் வெளிவரவில்லை. அண்மையில் முல்லைத்தீவு குமுலமுனை பகுதியில் வீதி அகலப்படுத்தும் பணியின்போது இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களின் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவை இறுதி யுத்தத்தின்போது கைதுசெய்யப்பட்டு உயிரோடு புதைக்கப்பட்டவர்களினதாக இருக்கலாம் என்று தடயவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

பெண் போராளிகளின் உள்ளாடைகளுடனும் இலக்கத்தகடுகளுடனும் அவை அந்தப் புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் தாக்கப்பட்ட விதத்தைக்கூட தடயவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். அவர்கள் வாயை திறந்த நிலையில் புதைக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர். எவ்வளவு சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கலாம்.

பட்டலந்தை மட்டுமல்ல, இந்த நாட்டில் வடக்கு, கிழக்கில் பல பகுதிகளில் வதை முகாம்கள் உள்ளன. தமிழர் வாழும் பிரதேசங்களில் நீங்கள் மண்ணைத் தோண்டினால் அங்கு தமிழரின் மனித எலும்புக்கூடுகளைக் காணும் பிரதேசங்களாக மாறியுள்ளன. நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள். நாங்கள் இந்த மண்ணில் அழிக்கப்பட்ட தனி தேசிய இனம். நாங்கள் கேட்பது நீதி, அந்த நீதி நியாயமானதாக இருக்க வேண்டும். சர்வதேச விசாரணைக்கு உட்பட்டதாகவும் மனிதநேயத்துக்கும் மனித உரிமைகளுக்கும் மதிப்பளித்தவையாக இருக்கவேண்டும். மனிதர்களைக் கொல்வதில் மிகப்பெரிய குற்றமான உணவு அனுப்பாமல் கொல்லுதல், அவர்கள் மீது பராச் குண்டுகளையும் கொத்துக் குண்டுகளையும் பொஸ்பரசு குண்டுகளையும் வீசி கொல்லுதல், மிகப்பெரிய தடை செய்யப்பட்ட ஆயுதங்களைப் பாவித்தல் என்பன மிகப்பெரிய போர்க் குற்றங்களாகும்.

வாகரையிலும் முள்ளிவாய்க்காலிலும் மிகப்பெரிய அளவில் இது மேற்கொள்ளப்பட் டுள்ளது. அந்த குண்டுகளின் அடையாளங் களுடன் மக்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். படைகளிடம் பலர் உயிருடன் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. குறைவாக நிறுத்தப்பட்டு உணவுகளை அனுப்பியபோது எத்தனையோ ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். எத்தனையோ ஆயிரம் குழந்தைகள் தமிழர் புனர்வாழ்வு கழகம் வழங்கிய கஞ்சிக்காக சின்ன சின்ன கிண்ணங்களுடன் வரிசையில் இருந்தபோது பராச் குண்டுகளில் சிக்கிக் கொல்லப்பட்ட வரலாறு அந்த மண்ணில் இடம்பெற்றுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட இனத்தின் சார்பாக அதனை நேரில் கண்டவன் என்ற வகையில் கூறுகின்றேன். தயவுசெய்து நீதி விசாரணையை எல்லாவற்றுக்கும் கொண்டுவாருங்கள். அந்த மக்கள் நம்பக்கூடிய வகையில் அதனைச் செய்யுங்கள். அதுவே நல்ல செய்தியாக அமையும். பட்டலந்தவில் உங்களுடைய போராளிகளுக்கு நடந்தவற்றை மட்டும் விசாரணைக்குட்படுத்துவது ஒரு பக்கச்சார்பானதாக மாறும். உங்களை நாங்கள் ஜே.வி.பி. போராளிகளாகவே பார்த்தோம். பயங்கரவாதிகளாக பார்க்கவில்லை.

ஜே.வி.பி. போராளிகள் கிளர்ச்சியாளர்கள் என்று கூறினாலும் உங்களுக்காக இரக்கத்துடன் பேசியவர்கள் நாங்கள். களனி ஆற்றில் இளைஞர்கள் கழுத்து வெட்டப்பட்டு மிதந்து வந்தபோது அவற்றைப் பார்த்து கவலையடைந்தவர்களில் தமிழர்கள் முக்கியமானவர்கள். எவர் கொல்லப்பட்டாலும் அதற்கான விசாரணை வேண்டுமென்பதில் தெளிவாக இருக்கின்றோம்.

பட்டலந்தவில் இருந்த வதைமுகாம் ஒரே இனத்துக்குள் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்கள். ஆனால், எங்கள் மீது திட்டமிட்டு 80 வருடங்களாக மெல்ல மெல்ல எமது நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பல இலட்சமான மக்கள் அழிக்கப்பட்டுள்ளனர். உணவு அனுப்பாமல், தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி இனப்படுகொலை செய்தனர். இதனால் தமிழ்த் தேசிய மக்கள் மீதான இனப்படுகொலை மிகவும் கருத்திற்கொள்ள வேண்டியது. இதற்கான நீதி விசாரணை வேண்டும். பட்டலந்த என்ற சொல்லில் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான இனப்படுகொலையை மறைத்துவிட வேண்டாம். அது சர்வதேச அளவில் பேசப்படும் பொருள். இறுதி யுத்தம் நடைபெற்றபோது பல நாடுகளின் செய்மதிகள் இங்கு நடந்த படுகொலைகளை மிகத்துல்லியமாக படம்பிடித்து வைத்துள்ளன. உலக நாடுகளிடம் இருக்கும் ஆதாரங்கள் மற்றும் ஆவணங்கள் தமிழ் மக்களின் சாட்சியங்களாக இருக்கின்றன.

இதன்படி சரியான நீதி விசாரணைவேண்டும். இந்த நாட்டில் உங்களின் கலாசாரம், பண்பாடு, அடையாளம் என்பனவற்றை மதிக்கின்றோம். உங்களுடன் சேர்ந்து வரத் தயாராகவிருக்கின்றோம். அதேபோன்று தமிழர்களுடைய தனித்துவம், அவர்களின் தேசிய அடையாளம், கலாசார அடையாளம் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கான நீதியை வழங்கவேண்டும். அதற்குத் தயாராகுங்கள். இப்போது முக்கிய சாட்சியாக காணாமல்போனோரின் உறவினர்களின் போராட்டங்கள் மூவாயிரம் நாட்களையும் கடந்து வீதிகளில் நடக்கின்றன. அவற்றை கருத்திலெடுத்து நீதிக்கான கதவுகள் திறக்கப்பட வேண்டும். அவை உண்மையை கொண்டுவர வேண்டும்'' - என்றார்.

# பத்திரமாக பூமிக்குத் திரும்பிய சுனிதா வில்லியம்ஸ்

சர்வதேச விண்வெளி நிலையத்தில் கடந்த 286 நாட்களாகத் தங்கியிருந்த சுனிதா வில்லியம்ஸ், பத்திரமாக பூமிக்குத் திரும்பினார். இந்திய நேரப்படி நேற்று அதிகாலை 3.30 மணிக்கு அவர் பயணித்த ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலம், புளோரிடா மாகாணத்துக்கருகில் கடலில் இறங்கி - மிதந்தது.

விண்கலத்திலிருந்து வெளியே வந்த சுனிதா வில்லியம்ஸ் சிரித்தபடி கையை அசைத்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

புட்ச் வில்மோர் மற்றும் சர்வதேச விண்வெளி நிலையத்தின் சக பணியாளர்களான அமெரிக்க விண்வெளி வீரர் நிக் ஹேக், ரஷ்ய விண்வெளி வீரர் அலெக்சாண்டர் கோர்புனோவ் ஆகியோருடன் இந்திய நேரப்படி நேற்றுமுன்தினம் காலை 10.35 மணிக்கு, சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து புறப்பட்ட சுனிதா வில்லியம்ஸ், 17 மணிநேர பயணத்துக்குப் பிறகு பூமியை அடைந்தார்.

இந்த ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலம் வளிமண்டல மறுநுழைவு என அழைக்கப்படும் ஆபத்தான கட்டத்தைக் கடந்து பூமியை நோக்கிப் பயணித்தது. பிறகு பல்வேறு கட்டங்களாக பரசூட்கள் விரிக்கப்பட்டு - அதன் வேகம் குறைக்கப்பட்டு- நீரில் இறங்கி- மிதந்தது.

ஸ்பிளாஷ்டவுன் (splashdown) என்ற முறையில் கடல் பகுதியில் விண்கலம் இறங்கியது. அதாவது, விண்கலம் இறங்கும்போது கடலில் உள்ள தண்ணீர் மிகப்பெரும் அளவில் தெறிக்கும் என்பதால் அந்த செயல்முறையை ஸ்பிளாஷ்டவுன் என்கின்றனர்.

இந்நிலையில் சற்றுத் தொலைவில் படகுகளில் காத்திருந்த மீட்புக் குழுவினர் நான்கு விண்வெளி வீரர்களையும் பத்திரமாக மீட்டனர்.

**தொடர்பு துண்டிக்கப்பட்ட சில நிமிடங்கள்:**

டிராகன் விண்கலம் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழைந்தபோது சற்று நேரத்துக்கு கட்டுப்பாட்டு அறையுடனான தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இது வழக்கமான நடைமுறையாகும். அப்போது விண்கலத்தைச் சுற்றி 1927 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை இருந்தது. டிராகன் விண்கலத்தின் வெப்பத்தடுப்பு ஓடுகள் உள்ளே இருந்த விண்வெளி வீரர்களைப் பாதுகாத்தன.

சிறிது நேரத்துக்குப் பிறகு தகவல் தொடர்பு மீட்கப்பட்டு கடலில் இறங்குவதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. தன்னிச்சையாக விண்கலம் பூமியை நோக்கி விரைந்தது.

அப்போது விண்கலம் சுமார் 27,000 கிலோமீற்றர் வேகத்தில் வந்து கொண்டிருந்தது. பின்னர் விண்கலத்தின் வேகத்தைக் குறைக்கும் பரசூட்கள் விரிந்தன. நாசாவின் கமராக்களில் இந்த நிகழ்வுகள் தெளிவாகப் படம்பிடிக்கப்பட்டன. பின்னர் படிப்படியாக வேகம் குறைக்கப்பட்டு கடலில் வந்து விழுந்த விண்கலத்தை நாசாவின் மீட்புப் படகுகள் பத்திரமாக கப்பலுக்கு எடுத்து வந்தன.

**துள்ளிக்குதித்த டொல்பின்கள்:**

விண்கலம் கடலில் விழுந்தபோது, அதைச் சுற்றி பல டொல்பின்கள் மேற்புறத்தில் நீந்திக்கொண்டிருந்ததை நாசாவின் கமராக்கள் காட்டின. அது மீட்புக் குழுவுக்குக் கிடைத்த பெருமை என்று நாசா விஞ்ஞானிகள் நகைச்சுவையாகக் கூறினர்.

கடலில் இருந்து விண்கலம் மீட்புப் படகில் ஏற்றப்பட்டபோது அதிலிருந்த கடல் நீர் கொப்பளித்து வெளியேறியது.

**விண்வெளியில் சிக்கியவர்கள் என்பது உண்மையா?**

சுனிதா வில்லியம்ஸும் புட்ச் வில்மோரும் திட்டமிடப்பட்ட 8 நாட்களை விட அதிக நாட்கள் அதாவது, சுமார் 286 நாட்கள் விண்வெளியில் தங்க நேரிட்டது. இருவரும் விண்வெளியில் சிக்கித்தவிப்பதாக விவரிக்கப்பட்ட போதிலும் அது ஒருபோதும் உண்மையில்லை.

ஏனெனில், கப்பல்களில் உள்ள உயிர் காக்கும் படகுகள் போலவே, சர்வதேச விண்வெளி நிலையத்திலும் ஒரு விண்கலம் அவசரகால பயன்பாட்டுக்காக எப்போதும் இணைந்தே இருக்கும். போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட கோளாறால் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட்ட நாசா, சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட விண்வெளி வீரர்களின் பாதுகாப்புக்கருதி அதே விண்கலத்தில் பூமிக்குத் திரும்புவதைத் தவிர்த்துவிட்டது. அதற்குப் பதிலாக, அவர்கள் இருவரும் சர்வதேச விண்வெளி நிலையத்திலேயே தொடர்ந்து தங்கியிருக்கவும் ஏற்கனவே திட்டமிட்டபடி பூமியிலிருந்து செல்லும் அடுத்த விண்கலத்தில் இருவரையும் பூமிக்கு அழைத்து வரவும் நாசா தீர்மானித்தது.

நாசாவின் இந்த முடிவே, சுனிதா வில்லியம்ஸ் பூமிக்குத் திரும்புவதை மாதக்கணக்கில் தள்ளிப்போட்டது. ஆகவே, சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் சர்வதேச விண்வெளியில் அதிக காலம் தங்கி ஆய்வுகளைத் தொடர்ந்தனர். அவர்கள் சுற்றுப்பாதை ஆய்வகத்தில் பல சோதனைகளை மேற்கொண்டதுடன், ஸ்பேஸ் வாக் எனப்படும் விண்வெளி நடையிலும் அவர்கள் பலமுறை ஈடுபட்டனர்.

**விண்வெளியில் தங்கிய கூடுதல் நாட்களில் இருவரும் சாதித்தது என்ன?**

விண்வெளியில் நீண்ட காலம் தங்கிய முதல் பெண்மணி, சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வெளியே அதிக மணிநேரம் செலவழித்த பெண் ஆகிய சாதனைகளை சுனிதா வில்லியம்ஸ் படைத்துள்ளார். இது சுனிதா வில்லியம்ஸின் மூன்றாவது விண்வெளிப் பயணம். மூன்று பயணங்களிலும் சேர்த்து மொத்தமாக ஒன்பது தடவைகள் விண்வெளியில் நடந்துள்ளார் சுனிதா. இந்தக் காலகட்டத்தில் மொத்தம் 62 மணி நேரம் 6 நிமிடங்களை அவர் விண்வெளி நடையில் செலவிட்டுள்ளார்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்தபடியே அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தது, கிறிஸ்மஸ் கொண்டாடியது, ஏற்கனவே வீட்டில் செலவிடத் திட்டமிட்டிருந்த கிறிஸ்மஸுக்கு ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பியது, செய்தியாளர் சந்திப்பை நிகழ்த்தியதென பலவற்றையும் அவர்கள் சாதித்துள்ளனர்.

**அடுத்த கட்டம் என்ன?**

9 மாதங்களுக்குப் பிறகு சுனிதா வில்லியம்ஸும் புட்ச் வில்மோரும் பூமிக்குத் திரும்பியுள்ளனர். அவர்கள் விரைவில் டெக்சாஸ் மாகாணம் ஹூஸ்டனில் உள்ள ஜான்சன் விண்வெளி மையத்துக்கு அழைத்துச்செல்லப்படுவார்கள். அங்கு அவர்கள் மருத்துவ நிபுணர்களால் பரிசோதிக்கப்படுவார்கள்.

நீண்ட கால விண்வெளி பயணங்கள் உடலைப் பாதிக்கின்றன. விண்வெளி வீரர்கள் எலும்பு அடர்த்தியை இழந்து தசை இழப்பைச் சந்திக்கின்றனர். இரத்த ஓட்டமும் பாதிக்கப்படுகிறது. கண் பார்வையும் பாதிக்கப்படலாம்.

உடல் இயல்பு நிலைக்குத் திரும்ப நீண்ட காலம் ஆகலாம். எனவே, சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகிய இருவரின் உடலும் புவி யீர்ப்பு விசையுடன் வாழ்வதற்கு மீண்டும் பழகுவதால் அவர்களுக்கு விரிவான உடற்பயிற்சி வழங்கப்படும்.





சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்தபோது அளித்த பேட்டிகளில், இருவருமே தாங்கள் எதிர்பார்த்ததை விட நீண்ட காலம் தங்குவதற்கு நன்கு தயாராக இருந்ததாகக் கூறியுள்ளனர்.

கடந்த மாதம் CBS இடம் பேசிய சுனிதா வில்லியம்ஸ், "என் குடும்பத்தினரையும் என் அன்புக்குரிய நாய்களையும் மீண்டும் பார்ப்பதுடன், கடலில் குதிப்பதையும் நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். பூமிக்குத் திரும்பி பூமியை உணர்வது மிகவும் நன்றாக இருக்கும்''- என்றார்.

**விண்வெளி எத்தகைய கடினமானது என்பதை உணர்த்திய பயணம்**

புட்ச் மற்றும் சுனிதாவின் வியத்தகு பணி, விண்வெளி கடினமானது என்பதை நமக்குக் உணர்த்துகிறது என்று பிபிசியின் அறிவியல் பிரிவு ஆசிரியர் ரெபேக்கா மொரெல்லி கூறுகிறார்.

நினைத்தது தவறாகப் போகலாம். தவறானது நடக்கலாம். அப்படி நிகழும்போது சில கடினமான முடிவுகளை எடுக்கவேண்டியிருக்கும் என்கிறார் அவர்.

"எட்டு நாட்களில் முடிய வேண்டிய பணியை ஒன்பது மாதங்களாக நீடிக்க வேண்டியிருப்பது நாசாவுக்கு சாதாரணமானதல்ல. ஆனால், புட்ச் மற்றும் சுனிதா இந்தச் சூழலுக்கு ஒரு பதிலாக இருக்கின்றனர். புதிய சூழ்நிலைக்கேற்ப தங்களை தகவமைத்துக்கொண்டு விண்வெளி நிலையத்தில் வாழ்வது - ஒரு விண்வெளி வீரர் என்பதற்கான ஒரு பகுதியாகும்."

ஒரு திட்டத்தை வைத்திருப்பது - அதை மாற்றுவதற்கும் தயாராக இருக்க வேண்டியது ஆகியவற்றை இந்தப் பயணம் உணர்த்தியிருக்கிறது என்கிறார் ரெபேக்கா.



**900 மணி நேர ஆராய்ச்சி, 150 பரிசோதனைகள்**

சர்வதேச விண்வெளி நிலையத்தில் திட்டமிட்டதற்கு மாறாக பல மாதங்கள் தங்கியிருக்க நேரிட்ட சுனிதா வில்லியம்ஸும் புட்ச் வில்ஸ்மோரும் அங்கு பல சாதனைகளைப் படைத்திருக்கின்றனர்.

இந்த விண்வெளிப் பயணத்தின் போது அவர்கள் 900 மணிநேர ஆராய்ச்சிகளைச் செய்திருக்கின்றனர். நாசாவின் விண்வெளி செயற்பாட்டு இயக்குநரான ஜோயல் மொண்டல்பானோ இந்தத் தகவலைக் கூறியிருக்கிறார். சுனிதா, புட்ச் ஆகியோர் விண்வெளி நிலையத்தில் பணியாற்றிய காலத்தில் 150 பரிசோதனைகளை மேற்கொண்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

நாசா விண்வெளி வீரர்கள் செய்திருக்கும் பணி "தேசத்துக்கு நன்மை பயக்கும்" என்றும், தசாப்தத்தின் இறுதிக்குள் செவ்வாய்க் கிரகத்தில் மனிதரைத் தரையிறக்கும் இலக்கை நாசா அடையும் வாய்ப்பை அதிகரிக்கிறதென்றும் மொண்டல்பானோ கூறுகிறார்.

போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தால் ஏற்பட்ட காலதாமதம்

61 வயதான வில்மோர், 58 வயதான சுனிதா இருவரும் போயிங் ஸ்டார்லைனர் விண்கலம் மூலமாக கடந்தாண்டு சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்றனர். அவர்கள் எட்டே நாட்களில் பூமிக்குத் திரும்பிவர வேண்டியது.

இந்த ஸ்டார்லைனர் விண்கலம் மனிதர்களுடன் சென்ற போயிங்கின் முதல் விண்கலம் ஆகும். வழக்கமான பயன்பாட்டுக்கு வருவதற்கு முன்பு விண்கலம் எவ்வாறு செயற்படுமென்பதை கவனிப்பதற்கான சோதனை ஓட்டமாக இது இருந்தது.



ஆனால், ஸ்டார்லைனர் விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்தை நெருங்கியபோது பல பிரச்சினைகளைச் சந்தித்தது. விண்கலத்தை வழிநடத்தும் அதன் ஐந்து உந்துவிசை அமைப்புகள் செயலிழந்தன. அதிலிருந்த ஹீலியமும் தீர்ந்து போனது.இதன் காரணமாக இவர்கள் இருவரும் பூமிக்குத் திரும்புவது தாமதமானது.அதன்பிறகு அமெரிக்க தொழிலதிபர் ஈலோன் மஸ்கின் விண்வெளி நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ்-இன் விண்கலத்தைக் கொண்டு அவர்களை பூமிக்குத் திரும்ப அழைத்துவருவதென 2024ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முடிவுசெய்யப்பட்டது.

ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் விண்கலத்தில் சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர், அமெரிக்க விண்வெளி வீரர் நிக் ஹேக், ரஷ்ய விண்வெளி வீரர் அலெக்சாண்டர் கோர்புனோவ்.முதலில் அவர்களை இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் பூமிக்குக் கொண்டு வருவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. பிறகு மார்ச் மாதமென முடிவுசெய்யப்பட்டது.

"சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கியுள்ள இரண்டு விண்வெளி வீரர்களையும் விரைவில் பூமிக்கு அழைத்து வருமாறு ஜனாதிபதி கூறியுள்ளார். நாங்கள் அப்படியே செய்வோம். பைடன் நிர்வாகம் இத்தனை காலம் அவர்களை அங்கேயே விட்டுவிட்டது மிகவும் மோசமானது" - என்று ஈலோன் மஸ்க் தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டார்.

**சுனிதா வில்லியம்ஸின் பின்னணி**

கடந்த ஒன்பது மாதங்களுக்கும் மேலாக விண்வெளியில் தங்கியிருந்த சுனிதா வில்லியம்ஸ், விண்வெளி நடையில் அதிக அனுபவம் கொண்ட பெண்களில் இரண்டாவது இடத்தில் (9 தடவை 62 மணி 6 நிமிடம்) உள்ளார்.

"விண்வெளியிலிருந்து நாம் வாழும் இந்தப் பூமியை பார்க்கும் வாய்ப்பைப் பெற்றதற்காக நான் மிகவும் அதிர்ஷ்டசாலி என்று கருதுகிறேன்" - இது தனது விண்வெளி பயணங்கள் குறித்து சுனிதா வில்லியம்ஸ் தெரிவித்த வார்த்தைகள்.

தற்போது வெற்றிகரமாக மற்றுமொரு நீண்ட விண்வெளி பயணத்தை நிறைவு செய்து, பூமிக்குத் திரும்பியுள்ள இவருக்கு உலகெங்கிலும் வாழ்த்துகளும் வரவேற்புகளும் குவிந்து வருகின்றன.

சுனிதா லின் வில்லியம்ஸ் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இரண்டாவது அமெரிக்க விண்வெளி வீரர். கல்பனா சாவ்லாவுக்கு அடுத்தபடியாக சர்வதேச விண்வெளி நிலையத்தின் எக்ஸ்பெடிஷன் -14 குழுவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதாவை நாசா சேர்த்துக் கொண்டது.

1965ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஓஹியோ மாகாணத்தில் பிறந்தவர் சுனிதா. அவருடைய அப்பா தீபக் பாண்டியா, குஜராத் மாநிலத்தின் அஹமதாபாத்தை பூர்வீகமாகக் கொண்டவர். தீபக் பாண்டியா 1958ஆம் ஆண்டு அமெரிக்காவில் குடியேறினார்.

சுனிதாவின் அம்மா போனி பாண்டியா. சுனிதாவின் கணவர் மைக்கேல் வில்லியம்ஸ். அவரும் ஒரு விமானியாகப் பணியாற்றியவர். தற்போது அவர் காவல்துறையில் பணியாற்றி வருகிறார்.

1998ஆம் ஆண்டு நாசா சுனிதாவை விண்வெளி வீரராகத் தேர்வு செய்தது. சுனிதா அமெரிக்க கடற்படை அக்கடமியில் முதுகலைப் பட்டம் பெற்றவர். அவர் ஒரு திறமையான போர் விமானி என்று குறிப்பிடுகிறார் உள்ளூர் பத்திரிகையாளர் சலீம் ரிஸ்வி.

சுனிதா இதுவரை 30 வகையான விமானங்களை இயக்கியுள்ளார். அதில் அவர் 2700 மணி நேரம் பறந்த அனுபவத்தையும் பெற்றிருக்கிறார்.

படிப்பை முடித்த சுனிதா வில்லியம்ஸ் கடற்படையில் விமானியாக தன்னுடைய பணியை துவங்கினார்.

**சுனிதா வில்லியம்ஸின் விண்வெளிப் பயணங்கள்**

2006ஆம் ஆண்டு டிசம்பர் 09ஆம் திகதி முதன்முறையாக டிஸ்கவரி விண்கலத்தின் மூலம் விண்வெளிக்குச் சென்றார். Expedition 14 குழுவுடன் பணிகளைத் தொடர்ந்த அவர் Expedition 15 விண்கலத்தில் பணிகளை முடித்துக் கொண்டு 2007ஆம் ஆண்டு ஜூன் 22ஆம் திகதி பூமிக்குத் திரும்பினார்.

2012ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் திகதி இரண்டாவது விண்வெளிப் பயணத்தை ரஷ்யாவின் சோயுஸ் டிஎம்ஏ-05 எம் விண்கலத்தின் மூலம் மேற்கொண்டார் சுனிதா வில்லியம்ஸ். இந்தப் பயணத்தை முடித்துக்கொண்டு அதே ஆண்டில் நவம்பர் 19ஆம் திகதி பூமிக்குத் திரும்பினார்.

2015ஆம் ஆண்டில் வணிக ரீதியான விண்வெளி பயணங்களுக்கான முதல் விண்வெளி வீரராக சுனிதா வில்லியம்ஸ் அறிவிக்கப்பட்டார். இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாக 2024ஆம் ஆண்டு ஜூன் 05ஆம் திகதி போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு பயணம் செய்தார்.

ஸ்டார்லைனர் விண்கலத்தின் த்ரஸ்டர்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இக்குழு இன்றி விண்கலம் பூமிக்குத் திரும்பியது. இதனால் வெறும் 8 நாட்கள் மட்டுமே திட்டமிடப்பட்டிருந்த இந்தப் பயணம், 9 மாதங்களைக் கடந்து நீண்டது.

2025, மார்ச் 15ஆம் திகதி இவர்கள் இருவரையும் அழைத்துவர ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்றது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் பணிகளைத் தொடர ஏதுவாக புதிய குழுவினர் அந்த விண்கலத்தில் சென்றனர்.

க்ரூ-10 திட்டத்தின் கீழ், ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலம் அமெரிக்க நேரப்படி ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 16) நள்ளிரவு 12 மணிக்கு சர்வதேச விண்வெளி மையத்துடன் வெற்றிகரமாக இணைந்ததாக நாசா கூறியது.



பிறகு, மார்ச் 17 இந்திய நேரப்படி காலை 10.35 மணிக்கு சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து பூமியை நோக்கிய தங்களது பயணத்தை சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட நால்வரும் தொடங்கினார்கள்.

59 வயதான சுனிதா வில்லியம்ஸ் தனது விண்வெளிப் பயணத்தில் அனுபவத்தில் பல சாதனைகளைப் படைத்துள்ளார். எதிர்பாராத விதமாக கூடுதல் நாட்கள் தங்க நேர்ந்த போதிலும், அவர் நல்ல உடல்நலத்துடன் இருப்பதாக நாசா தொடர்ந்து கூறிவந்தது. இறுதியாக அவர் நேற்று (மார்ச் 19) பத்திரமாக பூமியை வந்தடைந்துள்ளார்.

**நன்றி -பிபிசி**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மார்ச் 20ஆம் திகதி, வியாழக்கிழமை

# என்னவாகும் அதானியின் திட்டம்?

இலங்கையில் ஒரு பில்லியன் டொலர் (ரூ.8,690 கோடி) மதிப்பில் மேற்கொள்ளப்படவிருந்த இரு காற்றாலை மின்திட்டங்களை திரும்பப் பெறுவதாக முன்னதாக அறிவித்த அதானி கிரீன் எனர்ஜிஸ் நிறுவனம் மீண்டும் அது தொடர்பில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளதாக அறியமுடிந்தது.

மன்னார், பூநகரியில் அதானி கிரீன் எனர்ஜிஸ் நிறுவனத்தின் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தை மீளாய்வு செய்ய தேசிய மக்கள் சக்தி அரசு அண்மையில் குழு அமைத்தது. அதன் பின்னர் அந்த இரு மின் திட்டங்களையும் திரும்பப் பெறுவதாக அதானி குழுமம் அறிவித்தது. அதே நேரத்தில் எதிர்காலத்தில் இலங்கை அரசுடன் பல்வேறு திட்டங்களில் இணைந்து பணியாற்ற ஆர்வமாக இருப்பதாகவும் அதானி குழுமம் கூறியிருந்தது.

முன்னதாக, இந்த மின் திட்டங்களால் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடுமென்றும் ஒப்பந்தத்தில் வெளிப்படைத்தன்மை இல்லையென்றும் இலங்கை உயர் நீதிமன்றத்தில் எதிர்க்கட்சிகள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தரப்பில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அதே நேரத்தில், முந்தைய அரசு மேற்கொண்ட ஒப்பந்தத்தைவிட குறைந்த விலையில் அதானி குழுமத்திடமிருந்து வாங்க புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விரும்பினார்.

மேலும், அதானி குழுமம் மீது அமெரிக்க நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக் குறித்தும் இலங்கையில் புதிய அரசு விசாரணையைத் தொடங்கியது. இதுவும் அதானி குழுமம் இலங்கை மின் திட்டங்களிலிருந்து வெளியேற முக்கிய காரணமென்று அப்போது தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மற்றும் பூநகரியில் 484 மெகாவோட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி காற்றாலை பண்ணையை அமைப்பது தொடர்பான தனது திட்டம் தொடர்பில் இந்தியாவின் அதானி குழுமம் இன்னும் இரண்டுங் கெட்டான் நிலைப்பாட்டில் இருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

உத்தேச மின் உற்பத்தித் திட்டங்களுக்கு இலங்கை அரசுடன் அதானி குழுமம் ஏற்கனவே இணக்கம் கண்ட பின்புலத்தில் பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாயினவாயினும், புதிதாகப் பதவியேற்ற இலங்கை அரசாங்கம் அந்த மின்திட்டம் மூலம் கொள்வனவு செய்ய இணக்கம் காணப்பட்ட மின்சாரத்துக்கான கட்டணம் தொடர்பில் தீர்க்கமான புதிய நிலைப்பாடு சிலவற்றை எடுத்தமையால் காணப்பட்ட இணக்கம் குழப்பத்துக்குள்ளானது.

இருபது ஆண்டுகள் மின் கொள்முதல் ஒப்பந்தத்தின் கீழ் ஒரு யூனிட் மின்சாரத்தை 8.26 டொலர் சதத்துக்கு வாங்குவதற்கு முன்னைய இலங்கை அரசு ஒப்புக்கொண்டிருந்தது. அதனை ஒரு கிலோ வாட் மணிக்கு ஐந்து முதல் ஆறு டொலர் சதத்துக்கே வாங்க முடியுமென்று தற்போதைய இலங்கை அரசு ஒற்றைக் காலில் நிற்கிறது. அதைக் குறைந்தது ஏழு டொலர் சதம் அளவுக்காவது உயர்த்துவதற்கு இலங்கை அரசு இணங்குமானால், அதை ஒப்புக்கொண்டு திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க அதானி குழுமம் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தத் திட்டத்துக்காக ஏற்கனவே பூர்வாங்க வேலைகளை ஒட்டி 50 இலட்சம் டொலர்களை அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் செலவிட்டுள்ளது. மன்னாரில் சுற்றுச்சூழல் ஒப்புதலைத் தவிர்த்து இந்தத் திட்டம் தொடர்பான பெரும்பாலான ஒழுங்குமுறை அனுமதிகளை அதானி குழுமம் பெற்றுக்கொண்டு விட்டது .

இதற்கிடையில் இந்தக் காற்றாலைத் திட்டத்தை நிறுத்துமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டிருந்த ஐந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்கள், அந்தத் திட்டத்திலிருந்து அதானி குழுமம் வெளியேறுவதாக அரசாங்கத்துக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கின்றதென சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தெரிவித்தமையயடுத்து நேற்றுமுன்தினம் விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஆயினும், இந்தத் திட்டத்துக்கான முயற்சி இன்னமும் அடியோடு கைவிடப்படவில்லை, திட்டத்தைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் இன்னும் பிரகாசமாகவே இருக்கின்றன என்று கொழும்பு வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. திட்டத்திலிருந்து விலகுவதற்கான முடிவு குறித்து இலங்கை முதலீட்டுச் சபைக்கு அதானி நிறுவனம் கடிதம் எழுதியிருந்தாலும் அதை முற்றிலுமாக நிறுத்த எந்தச் சட்ட நடவடிக்கைகளையும் அது இன்னும் எடுக்கவில்லையென்றும் வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

குழப்பத்திலிருக்கும் அதானி குழுமத் திட்டம் குறித்து ஜூன் மாதத்துக்கு முதல் ஒரு திட்டவட்டமான முடிவெடுக்கப்படுமெனக் கூறப்படுகின்றது. இந்தியப் பிரதமர் மோடி இலங்கைக்கு வருகைதரும் வேளையில் இந்தத் திட்டம் இறுதி செய்யப்படுமென்று நம்பப்படுகிறது. அதானியின் திட்டம் எப்படியும் இலங்கையில் முதலீடு செய்யப்படுமென்றாலும் அதில் ஏற்படும் எதிர்வினைகளையும் ஆட்சியாளர்கள் சமாளிக்க வேண்டும்.

## இன்றைய நாளில்...

- 1864 – இலங்கையின் பிரபலகொள்ளைக்காரன் உத்துவன்கந்தை சூர சரதியல் என்பவன் கேகாலை, மாவனெல்லையில் கைதுசெய்யப்பட்டான். பின்னர் 1964 மே 7இல் தூக்கிலிடப்பட்டான்.
- 1915 – ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் தனது பொதுச் சார்பியற் கோட்பாட்டை வெளியிட்டார்.
- 1948 – சிங்கப்பூரில் முதலாவது தேர்தல் இடம்பெற்றது.
- 2015 – வலய மறைப்பு, சம இரவு நாள், பெருமுழுநிலவு அனைத்தும் ஒரே நாளில் நிகழ்ந்தன.

# பாகிஸ்தானில் ரயில் கடத்தலின் அதிர்வலை

வழிபாட்டுத் தலங்கள், பொதுமக்கள் கூடும் இடங்கள், இராணுவ வீரர்கள் போன்றோரைக் குறிவைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவதை உலகெங்கும் காண்கிறோம். ஆனால், பாகிஸ்தானில் ஒரு ரயிலையே பயங்கரவாதிகள் கடத்திச் சென்ற சம்பவம் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் உள்ள குவெட்டா நகரிலிருந்து கைபர் பக்துன்குவா மாகாணத்திலுள்ள பெஷாவர் நகருக்கு சுமார் 400 பயணிகளுடன் 9 பெட்டிகளைக் கொண்ட ஜாஃபர் விரைவு ரயில் கடந்த மார்ச் 11இல் புறப்பட்டது.

பெரோ குன்ரி என்ற இடத்துக்கருகே இந்த ரயில் சென்ற தண்டவாளத்தைக் குண்டு வைத்து தகர்த்த பலூசிஸ்தான் விடுதலை இராணுவம் (பி.எல்.ஏ.) என்ற பயங்கரவாத அமைப்பினர், அந்த ரயிலுக்குள் ஏறி அதைக் கடத்தினர். பயணிகளை மீட்க பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் எடுத்த நடவடிக்கையில் 33 பயங்கரவாதிகள், 4 இராணுவ வீரர்கள், 21 பயணிகள் என 58 பேர் உயிரிழந்தனர்; 300க்கும் மேற்பட்ட பயணிகள் மீட்கப்பட்டனர் என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும், அவர்களில் 214 பயணிகளைக் கொன்றுவிட்டதாக பி.எல்.ஏ. அமைப்பு அறிவித்துள்ளது.


இந்தத் தாக்குதல் சம்பவத்தின் சுவடு மறைவதற்குள், கைபர் பக்துன்குவா மாகாணத்தில் டேங்க் மாவட்டத்தில் இராணுவ நிலையின் பிடித்துள்ளது.

இதே பலூசிஸ்தான் விடுதலை இராணுவம் அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதி,குவெட்டா ரயில் நிலையத்தில் கடந்த 2024 நவம்பர் 09 ஆம் திகதி நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 32 பேர் கொல்லப்பட்டனர்.

பரப்பளவில் பாகிஸ்தானின் மிகப் பெரிய மாகாணமாக பலூசிஸ்தான் உள்ளது. எரிவாயு, தங்கம், மீன் வளம், தாமிர சுரங்கங்கள் போன்ற இயற்கை வளங்கள் மிகுதியாக உள்ள பகுதி இது. இந்தப் பகுதியிலுள்ள குவாதர் துறைமுகம் மிகப் பெரியளவில் மேம்படுத்தப்பட்டுள்ளது. இயற்கை வளங்கள், துறைமுகம் இருப்பினும், உள்ளூர் மக்கள் அதனால் பாகிஸ்தான் ஆதரவளித்தது. தலிபானை பாகிஸ்தான் அரசு அங்கீகரித்தது. அதன் தலைவர்கள் தனது நாட்டிலிருந்து செயற்பட அனுமதியுமளித்தது.

அமெரிக்காவில் 2001ஆம் ஆண்டில் உலக வர்த்தக மையத்தின் மீதான தாக்குதலுக்குப் பின்னர் தலிபான்களுக்கெதிராக அந்த நாடு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது அதற்கு பாகிஸ்தான் ஆதரவளித்ததால் தலிபான்களின் எதிர்ப்பை எதிர்கொண்டது.

பாகிஸ்தானில் இப்போதைய ஆட்சியை அகற்றிவிட்டு முழுவதும் ஷரிஆ சட்ட அடிப்படையில் ஆட்சியை நிறுவுவதற்காக அமைக்கப்பட்ட



மீது தற்கொலைப் படைத் தாக்குதலில் ஈடுபட்டவர் உட்பட தெஹ்ரீக் ஏ தலிபான் அமைப்பினர் 10 பேர் வியாழக்கிழமை (மார்ச் 13) கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் இதுபோன்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படுவது புதிதல்ல. இருப்பினும், அண்மைக்காலமாக இதுபோன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன. 2023ஆம் ஆண்டில் பயங்கரவாதத் தாக்குதல்களில் 748 பேர் உயிரிழந்தனரென்றால், இந்த எண்ணிக்கை 2024இல் 1,081ஆக அதிகரித்துள்ளது. பயங்கரவாதத் தாக்குதல்களால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் பாகிஸ்தான் 2023இல் நான்காவது இடத்திலிருந்து 2024இல் இரண்டாவது இடத்தைப் பெரியளவில் பயனடையவில்லை என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாக உள்ளது.

பலூச் இன மக்கள் அங்கு சிறுபான்மையினராக உள்ளனர். 1948இல் கலாத் பகுதி வலுக்கட்டாயமாக பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டபோது, அதன் இளவரசர் அப்துல் கரீம் ஆயுதம் தாங்கிய புரட்சியில் ஈடுபட்டார். அப்போதுமுதல் வெவ்வேறு காலகட்டங்களில் இந்தப் பகுதி மக்கள் பாகிஸ்தான் அரசுக்கெதிராக போர்க்கொடி உயர்த்தி வருகின்றனர்.

காஷ்மீர் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டுமென்று பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் அவ்வப்போது தீர்மானம் நிறைவேற்றுவதையும் ஐ.நா. சபைக் கூட்டங்களில் தொடர்பே இல்லாதபோதும் குரலெழுப்புவதையும் வாடிக்கையாகக் கொண்டுள்ள பாகிஸ்தான், பலூசிஸ்தானில் எதிர்ப்புக் குரல் எழுந்ததால் இராணுவ ரீதியாக நடவடிக்கையெடுப்பதுடன் எதிர்ப்பு இயக்கத் தலைவர்கள், மாணவர்கள், அறிவுஜீவிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோரைக் கடத்திக் கொன்றுள்ளது.

ஆப்கானிஸ்தானில் 1990களில் ரஷ்யாவுக்கு எதிராக தலிபான்கள் போராடியபோது தலிபான் அமைப்புக்கு தெஹ்ரீக்- ஏ- தலிபான் என்ற பயங்கரவாத அமைப்புக்கு இப்போது ஆப்கான் தலிபான்கள் ஆதரவும் அடைக்கலமும் கொடுத்து வருகின்றனர்.

ஒருபுறம் பலூசிஸ்தான் விடுதலை இராணுவம் தாக்குதலை அதிகரித்துள்ளதென்றால் மறுபுறம் தெஹ்ரீக்- ஏ- தலிபான் அமைப்பும் அவ்வப்போது கடும் தாக்குதல்களை நடத்தி வருவது பாகிஸ்தான் அரசுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

முந்தைய அதிபர்கள் போன்று ட்ரம்ப் பொருளாதார ரீதியாக உதவுவாரா என்று தெரியாத நிலையைப் பாகிஸ்தான் எதிர்கொள்கிறது. இந்தப் பின்னணியில் பயங்கரவாதிகளின் தாக்குதல்களும் பெரும் தலைவலியாக மாறியுள்ளன.


“நமது வீட்டில் பாம்புகளை வளர்த்துவிட்டு, அவை எதிரிகளை மட்டுமே கடிக்குமென்று எதிர்பார்க்க முடியாது’’- என்று பாகிஸ்தான் குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த ஹிலாரி கிளிண்டன் 2011ஆம் ஆண்டு கூறியது இப்போதும் அந்த நாட்டுக்குப் பொருந்துவதாக உள்ளது. பொருளாதார நெருக்கடி போதாதென்று, பயங்கரவாதத்தையும் அரசியல் நிலையற்ற தன்மையையும் பாகிஸ்தான் எதிர்கொள்கிறது.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.

**நன்றி- தினமணி**

## தவக்கால சிந்தனை

### இப்பொழுது இலாசர் ஆறுதல் பெறுகிறார்; நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய்



“செல்வர் ஒருவர் இருந்தார். அவர் விலையுயர்ந்த மெல்லிய செந்நிற ஆடை அணிந்து, நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந்தார். இலாசர் என்னும் பெயர் கொண்ட ஏழை ஒருவரும் இருந்தார். அவர் உடல் முழுவதும் புண்ணாய் இருந்தது. அவர் அச்செல்வருடைய வீட்டு வாயில் அருகே கிடந்தார். அவர் செல்வருடைய மேசையிலிருந்து விழும் துண்டுகளால் தம் பசியாற்ற விரும்பினார். நாய்கள் வந்து அவர் புண்களை நக்கும். அந்த ஏழை இறந்தார். வானதூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். செல்வரும் இறந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்டார்.


அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்டபோது அண்ணாந்து பார்த்துத் தொலையில் ஆபிரகாமையும் அவரது மடியில் இலாசரையும் கண்டார். அவர், ‘தந்தை ஆபிரகாமே, எனக்கு இரங்கும்; இலாசர் தமது விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து எனது நாவைக் குளிரச் செய்ய அவரை அனுப்பும். ஏனெனில், இந்தத் தீப்பிழம்பில் நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்’ என்று உரக்கக் கூறினார்.

அதற்கு ஆபிரகாம், ‘மகனே, நீ உன் வாழ்நாளில் நலன்களையே பெற்றாய்; அதே வேளையில் இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக்கொள். இப்பொழுது அவர் இங்கே ஆறுதல் பெறுகிறார்; நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய். அன்றியும் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பெரும் பிளவு ஒன்று உள்ளது. ஆகையால் இங்கிருந்து ஒருவர் உங்களிடம் வர விரும்பினாலும் கடந்து வர இயலாது. அங்கிருந்து நீங்கள் எங்களிடம் கடந்து வரவும் இயலாது’ என்றார்.

அவர், ‘அப்படியானால் தந்தையே, அவரை என் தந்தை வீட்டுக்கு அனுப்புமாறு உம்மிடம் வேண்டுகிறேன். எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. அவர்களும் வேதனை மிகுந்த இந்த இடத்துக்கு வராதவாறு அவர் அவர்களை எச்சரிக்கலாமே’ என்றார். அதற்கு ஆபிரகாம், ‘மோசேயும் இறைவாக்கினர்களும் அவர்களுக்கு உண்டு. அவர்களுக்குச் செவிசாய்க்கட்டும்’ என்றார். அவர், ‘அப்படியல்ல, தந்தை ஆபிரகாமே, இறந்த ஒருவர் அவர்களிடம் போனால் அவர்கள் மனம் மாறுவார்கள்’ என்றார். ஆபிரகாம், ‘அவர்கள் மோசேக்கும் இறைவாக்கினருக்கும் செவி சாய்க்காவிட்டால், இறந்த ஒருவர் உயிர்த்தெழுந்து அவர்களிடம் போனாலும் நம்ப மாட்டார்கள்’ என்றார்.”

## நக்கல் நமசிவாயம்

**இப்பதான் தெரியுது... எவ்வளவு தேடியும் சந்தேகநபர் ஒருவரை கைது செய்ய முடியாத பொலிஸ் டிப்பார்ட்மென்ட்டைத்தான் வச்சிருந்திருக்கிறார் தேசபந்து ஐயா..**



## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் பங்குனி மாதம் 06ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்** உடலைக் கெடுக்கும் எந்த முயற்சியும் நன்மை தராது. கோபத்தைக் குறைத்துக்கொண்டால் இலாபம் உண்டு.

**ரிஷபம்** காதல் திருமணம் கைகூடும். உல்லாசமாகவும் மகிழ்ச்சியாகவும் இன்றைய நாளைக் கழிப்பீர்கள். பணக்குறை நீங்கும்.

**மிதுனம்** நோய் பீடையிலிருந்து நிவாரணம் கிடைக்கும். பசி தாகம் இவையெல்லாம் ஒருபக்கம் இருக்க வேலையில் முழுமூச்சாக இருப்பீர்கள்.

**கடகம்** புத்திரர்களால் சற்று மனக்கவலை அல்லது செலவுகள் ஏற்படும். அரச சேவையிலுள்ள நீங்கள் நல்ல வாய்ப்புகளை நழுவவிடுவீர்கள்.

**சிம்மம்** கல்வி அல்லது பரீட்சையில் நீங்கள் எதிர்பார்த்திருந்த நன்மைகள் அமைவதில் தாமதம் உண்டு. வாகனச் செலவுகள் உண்டு.

**கன்னி** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும் நாள். புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.நண்பரின் உதவி உண்டு.

**துலாம்** தேவையற்ற செலவுகளால் பணத்தை இழப்பீர்கள். வாய் வார்த்தைகளால் குடும்பத்தில் வீண் குழப்பங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்** உடல், மன நலத்தில் அக்கறை காட்டுங்கள். மனக் கட்டுப்பாடு மிக அவசியம். தேவையற்ற டென்ஷனால் குழப்பத்தில் இருப்பீர்கள்.

**தனுசு** உங்கள் மதிப்பை நீங்களே கெடுத்துக் கொள்ளாதீர்கள். நேரத்துக்கு தேவையான உணவு, உறக்கமின்றி சிரமப்படுவீர்கள்.

**மகரம்** எந்த வேலையையும் மிக எளிதில் முடிப்பீர்கள். சகாக்கள் மூலம் உதவிகளைப் பெறுவீர்கள். திடீர் அதிர்ஷ்டம் உண்டு.

**கும்பம்** எதிர்கால வாழ்க்கைபற்றிய சிந்தைகளில் இருப்பீர்கள். நண்பரின் எதிர்பாராத உதவியால் ஆனந்தமடைவீர்கள்.

**மீனம்** நீங்கள் எண்ணிய வெளிநாட்டுப் பயணம் நிறைவேறும். யாரையும் வீணே பகைத்துக்கொள்ளாதீர்கள். பொறுமையாக இருங்கள்.

| | |
|---|---|
| **திதி** | : சஷ்டி பி.இ.2.45 வரை பின் சப்தமி |
| **நட்சத்திரம்** | : அனுஷம் மு.இ.11.31 வரை பின் கேட்டை |
| **பிறை** | : தேய்பிறை |
| **யோகம்** | : சித்த யோகம் மு.இ.11.31 வரை பின் மரண யோகம் |
| **வார சூலை** | : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| **நல்ல நேரம்** | : காலை- 9.14 – 12.14 மணி வரை. மாலை- 4.14 – 6.14 மணி வரை. |
| **ராகு காலம்** | : 1.44 – 3.14 மணி வரை |
| **எமகண்டம்** | : 6.14 - 7.44 மணி வரை |
| **குளிகை** | : 9.14 - 10.44 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முன்னிரவு 11.31 மணி வரை**

அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று முன்னிரவு 11.31 மணிக்கு மேல்**

அஸ்வினி, பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# நபரொருவரின் மாதாந்த வாழ்க்கைச் செலவு ரூ.16,334; 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு ரூ.65,336 போதுமானதா?

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி



2025 ஜனவரியில் உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டின் பிரகாரம், ஒரு நபர் ஒரு மாதம் வாழ்வதற்கு 16,334 ரூபா தேவை. 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு மாதம் 65,336 ரூபா தேவை. இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பக்கெட் 50 ரூபாவால் அதிகரித்து வரும் வேளையில், 4 பேர் கொண்ட குடும்பத்தின் உணவுத் தேவைகளுக்கு 65,336 ரூபா போதுமா? இதன்மூலம் வாழ முடியுமா என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) உரையாற்றும்போதே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் பேசுகையில்,

வறுமைக் கோட்டை மதிப்பிடும் முறைமையில் பல பிழைகள் காணப்படுகின்றன. இது குறித்து ஆராய்ந்து, தரவு மையக் கொள்கைகளை வகுக்க வேண்டும். தவறான தரவுகளின் அடிப்படையில் அரசாங்கக் கொள்கைகள் வகுக்கப்பட்டால், சகலதுமே சீர்குலையும். முன்னைய அரசாங்கமும் இதுபோன்ற விஞ்ஞானபூர்வ தரவுகளின் அடிப்படையில் அஸ்வெசும திட்டத்தை முன்னெடுக்காமையால் தோல்வி கண்டதொரு திட்டமாக அது இன்று மாறியுள்ளது.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும் பங்களிப்பை வழங்கும் நுண் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறையினர் தற்போது பாரிய பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். முப்பெரும் நெருக்கடிகள் உருவாகி ஏற்படுத்திய மோசமான கடன்கள், அதன் நிலுவைத் தொகைகள் மற்றும் வட்டித் தொகைகள் போன்றன காணப்படும் சூழ்நிலையில், அவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இந்தக் கடன் சுமைக்கு நிலையான தீர்வொன்றை வழங்க வேண்டும்.

சர்வதேச வர்த்தக உறவுகளை நாம் பேணிக்கொள்ள வேண்டும். தற்போது நமது நாட்டில் இருதரப்பு மற்றும் பலதரப்பு வர்த்தக ஒப்பந்தங்கள் காணப்படுகின்றன. இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை நிலைப்பாட்டை அறிய விரும்புகிறோம். நாட்டுக்கு பெறுமானம் சேர்க்கும் வகையில் இந்த ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இது தொடர்பான தொழில்நுட்ப ரீதியிலான நடவடிக்கைகள் ஏதும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவா? வலுவான வர்த்தகக் கொள்கையை உருவாக்குவதற்கான பொறிமுறை இங்கு காணப்படுகின்றதா என்பதில் சிக்கல் காணப்படுகின்றது.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை குறித்து மீண்டும் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது. நாட்டை நேசிக்கும் எதிர்க்கட்சி என்ற வகையில், ஜி.எஸ்.பி. பிளஸுக்காக எப்போதும் குரலெழுப்பி வருகிறது. இதனைப் பெற நாம் எமது பூரண ஆதரவைப் பெற்றுத் தருவோம். இது நாட்டின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை நல்கி வருவதால், இதனைப் பேணிவருவதற்கேற்ற முறையான கொள்கையை அரசாங்கம் கொண்டிருக்க வேண்டும். ஜி.எஸ்.பி.பிளஸ் மூலம் 3,451 பொருட்களுக்கான அமெரிக்க சந்தை வாய்ப்பு எமக்கு காணப்பட்டாலும், அது 2020 டிசம்பர் 20 ஆம் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. ஆனால், இதனை மீண்டும் ஆரம்பிப்பதற்கான இராஜதந்திர முன்னெடுப்பு இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. தமக்கு நல்ல இராஜதந்திர உறவுகள் இருப்பதாக அரசாங்கம் தேர்தல் காலங்களிலும் அதற்குப் பின்னரும் தம்பட்டம் அடித்தது. அவ்வாறு இராஜதந்திர உறவுகள் இருக்குமானால் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கமுடியுமல்லவா?''- என்றார்

# இ.தொ.காவின் வேட்பாளர்கள் வேட்புமனுவில் கையெழுத்திட்டனர்





**(பொகவந்தலாவ நிருபர்)**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இ.தொ.காவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர்கள் வேட்புமனுவில் கையெழுத்திட்டனர்.

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டம், நோர்வூட் பிரதேச சபைக்காக 12 தொகுதிகளில் இ.தொ.கா. சார்பில் சேவல் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் நேற்று முன்தினம் (18) கொட்டகலை CLF வளாகத்தில் அமைந்துள்ள காரியாலயத்தில் வேட்புமனுக்களில் கையெழுத்திட்டனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், நிதிச் செயலாளரும் தவிசாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் முன்னிலையிலேயே வேட்புமனுவில் கைச்சாத்திட்டனர்.

# இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழில் வேட்பு மனுத் தாக்கல்



**(பு.கஜிந்தன்)**

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களை தமிழரசுக் கட்சி நேற்று (19) தாக்கல் செய்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுகின்றது.

இதற்கான வேட்புமனுக்களை கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் நேற்று காலை (19) கிழக்கு மாகாணத்தில் தாக்கல் செய்திருத்தனர்.

இதனைத் தொடர்ந்து வடக்கில் யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களை யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்களத்தில் தாக்கல் செய்துள்ளது.

கட்சியின் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் தலைமையிலான தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாண தேர்தல் திணைக்களத்தில் வேட்பு மனுக்களைக் கையளித்துள்ளனர்.

# காத்தான்குடி மத்திய கல்லூரி பரீட்சை மண்டபத்தில் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு அநீதி

## நேரம் மட்டுப்படுத்தப்பட்டு தமிழ்ப்பாட விடைத்தாள்கள் பெறப்பட்டதாக மாணவர்கள் குற்றச்சாட்டு

**(காத்தான்குடி செய்தியாளர்)**



காத்தான்குடி மத்திய கல்லூரியில் 2024 கல்வியாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் செவ்வாய்க்கிழமை (18) தமிழ்ப் பாடப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு பரீட்சை மண்டபத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

வினாத்தாள்களுக்கு வழங்கப்பட்ட நேரத்தை மட்டுப்படுத்தி ஒரு மணித்தியாலமும் நாற்பது நிமிடங்களும் என நேர அவகாசம் இருந்தும் அவை மறுக்கப்பட்டு விடைத்தாள்கள் பரீட்சை மண்டபத்தில் கடமையாற்றிய மேற்பார்வையாளர்களால் குறைந்த நேரத்தில் பெறப்பட்டுள்ளன.

இதனால் மாணவர்கள் முழுமையாகப் பரீட்சை வினாக்களுக்கு விடையளிக்கத் தவறியுள்ளதுடன் மன உளைச்சலுக்கும் உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காத்தான்குடி மத்திய கல்லூரியில் இரண்டு பரீட்சை மண்டபங்களில் பரீட்சைகள் நடைபெற்ற போதிலும் ஒரு மண்டபத்திலே இவ்வாறு அநீதி இடம்பெற்றுள்ளது.

மாணவர்கள் தங்களது புள்ளிகள் மற்றும் பெறுபேறுகள் குறைவடையலாமென்றும் தமிழ்மொழி பாடமானது மிக முக்கியமானதென்றும் தங்களது எதிர்காலம் இதனால் பாதிப்படையலாமென்றும் முழுமையாக புள்ளிகளை வழங்குவதன் மூலம் இதற்கான நீதி வழங்கப்பட வேண்டுமெனவும் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது நீதி கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அத்தியாவசிய பொருட்களுக்கான வரியை நீக்குவதாக தேர்தல் பிரசாரத்தில் கூறிய அநுர அதனை மறந்துவிட்டார்

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. சுட்டிக்காட்டு



தேர்தல் பிரசாரங்களின்போது அத்தியாவசிய பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கு 18 வீத வரியை உடனடியாக நீக்குவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்திருந்தார். அதேபோன்று, பாடசாலை உபகரணங்களுக்கான வரி, எரிபொருளுக்கான வரி ஆகியவற்றையும் நீக்குவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால், இதுவரை அந்த வரிகள் நீக்கப்படவில்லையென ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பி. முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது அரசாங்கம் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்திருந்தது. கடந்த காலங்களிலும் அரிசி இறக்குமதி செய்திருக்கிறது. ஆனால், எந்த அரசாங்கமும் அரிசி இறக்குமதிக்கு 10 ரூபாவுக்கு அதிகமான வரி அறவிட்டதில்லை. என்றாலும், இந்த அரசாங்கம் இறக்குமதி செய்யும் ஒரு கிலோ அரிசிக்கு 65 ரூபா வரியை அறவிடுகிறது.

அதேநேரம், அரிசி ஆலை உரிமையாளர்கள் தெரிவிக்கும் விலைக்கு அரிசியை விற்பனை செய்வதற்கு பாரியளவில் அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. அரிசி மாபியாவை இல்லாதொழிப்பதாகத் தெரிவித்துவந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அரிசி ஆலை உரிமையாளர்களுடன் 5 தடவைகள் கலந்துரையாடி அவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு 10ரூபாவை அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுத்தார்.

எதிர்க்கட்சியில் இருக்கும்போது மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் வறுமையில் இருக்கும் மக்களுக்கு வசதிவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தெரிவித்து வந்தவர்கள், தற்போது ஆட்சிக்கு வந்த பின்னர் அவை அனைத்தையும் மறந்து செயற்படுகின்றனர். ஏப்ரல் முதலாம் திகதி முதல் பால்மா விலை 50 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுச் செல்வதன் மூலம் மக்கள் மிகவும் கஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தேசிய நுகர்வோர் சங்கத்தின் 2019ஆம் ஆண்டின் டிசம்பர் மாத விலைச்சுட்டெண்ணின் பிரகாரம் 4பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு மாதச் செலவு 43,391 ரூபா. அதேநேரம், 2025 ஜனவரி மாதத்தில் 4பேர் கொண்ட குடும்பமொன்றின் மாதச் செலவு 1,04,851ரூபாவாகக் கணக்கிட்டிருக்கிறது. 60ஆயிரம் ரூபா வரை அதிகரித்துள்ளது. அதில் நூற்றுக்கு 39 வீதமே அவர்களின் உணவுப்பொருட்களுக்காக செலவிடப்படுகிறது.

அதேபோன்று, கொழும்பு விலைச்சுட்டெண்ணின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4பேர் கொண்ட குடும்பத்தின் மாதச் செலவு 79,923 ரூபா. அதேநேரம், 2025 பெப்ரவரி மாதத்தில் 4பேர் கொண்ட குடும்பமொன்றின் மாதச் செலவு 1,76 409 ரூபா. இது மக்களால் தாங்கிக்கொள்ளக்கூடிய தொகை அல்ல. இதில் மக்கள் தங்களின் உணவுத்தேவைக்கு செலவிடுவது நூற்றுக்கு 26வீதம். நூற்றுக்கு 74வீதம் உணவு அல்லாத தேவைக்கு செலவிடப்படுகிறது. இது மிகவும் பயங்கரமான நிலைமை. இந்த நிலைமையால் எதிர்காலத்தில் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் இருக்கிறது.

ஏனெனில், மக்களின் தேவைகள் அதிகரிக்கும்போது அவர்கள் உணவுப் பொருட்களின் தேவையையே குறைத்துக்கொள்கின்றனர். மக்களுக்கு மின்சாரம், குடிநீர்க் கட்டணங்கள், பிள்ளைகளின் மேலதிக வகுப்புக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், மருந்துப்பொருட்களின் கட்டணம், போக்குவரத்துக் கட்டணங்களைக் குறைத்துக்கொள்ள முடியாது. அதனால் மக்கள் தங்களின் உணவு வேளையை குறைத்துக்கொண்டும் மலிவான உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்யவும் தூண்டப்படுகின்றனர். அதனால் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

தேர்தல் பிரசாரங்களின்போது அத்தியாவசிய பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கு 18 வீத வரியை உடனடியாக நீக்குவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்திருந்தார். அதேபோன்று பாடசாலை உபகரணங்களுக்கான வரி, எரிபொருளுக்கான வரி ஆகியவற்றையும் நீக்குவதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரை அந்த வரிகள் நீக்கப்படவில்லை''-என்றார்.




**எந்தவொரு மனிதன் ரமழானுடைய மாதத்துக்குள் நுழைந்து அவனுக்குள் ரமழான் வந்ததன் பிறகு பாவங்கள் மன்னிக்கப்படாத நிலையில் ரமழான் அவனைவிட்டு கடந்துவிடுமாக இருந்தால் அவனுக்கு நாசம் உண்டாகட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.**

**(நூல் திர்மிதி)**

**எனவே, மனிதன் என்ற அடிப்படையில் நாங்கள் பாவங்கள் செய்யக்கூடியவர்கள். அதனால் நாங்கள் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களுக்காக அல்லாஹ்விடம் மன்றாடி மன்னிப்பு கேட்பதற்கு இந்த ரமழானை பயன்படுத்திக்கொள்வோம்.**

**(தொழுகை நேரங்கள்)**
**(19ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரை)**

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 5.01 |
| சூரிய உதயம் | - | 6.16 |
| ழுஹர் | - | 12.20 |
| அஸர் | - | 3.33 |
| மஃரிப் | - | 6.22 |
| இஷா | - | 7.31 |

# அவிசாவளை துப்பாக்கிச்சூடு

## - துப்பாக்கிதாரி கைது

பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் தொடர்புடைய 31 வயது நபரொருவரை மேல் மாகாண (தெற்கு) பிரிவு குற்றப்பிரிவு அதிகாரிகள் ஹோமாகமவில் கைதுசெய்துள்ளனர்.

ஹோமாகமவில் உள்ள கலவிலவத்தையில் 5 கிராம் ஹெரோயினுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோணபாலவைச் சேர்ந்த சந்தேக நபர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்தவர் என்பதுடன், மே 26, 2023 அன்று அவிசாவளையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்டவரென்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# ‘நகர பசுமை வலய’ வேலைத்திட்டம் பேலியகொட - ஒருகொடவத்தையில் ஆரம்பம்



நாட்டுக்குள் ஒழுக்க, சமூக மற்றும் சூழலியல் ரீதியான புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, சமூகத்தை மேலும் உயர்வான நிலைக்கு உயர்த்தி வைப்பதை நோக்காகக்கொண்ட ‘Clean Sri Lanka’ திட்டத்தின்கீழ் ‘முன்னோடி நகர பசுமை வலய’ வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் முதற் கட்டத்தின் கீழ் பேலியகொட மற்றும் ஒருகொடவத்த பகுதிகளில் ‘முன்னோடி நகர பசுமை வலய’ வேலைத்திட்டங்கள் இரண்டை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பசுமை நகர திட்டத்தின் கீழ் நகர திட்டமிடல் வேலைத்திட்டமாக அரச மற்றும் தனியார் துறை பங்களிப்புடன் முன்னெடுக்கப்படவிருக்கும் இந்த வேலைத்திட்டம் இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அரச - தனியார் - மக்கள் கூட்டிணைவு உள்ளிட்ட (Public- Private – People Partnership) 4P எண்ணக்கருவுக்கமைவாக அரச துறை, தனியார் துறை மற்றும் பொதுமக்களை இணைத்துக்கொண்டு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நகர அளவில் மக்கள் தொகை அதிகரிப்பதால் ஏற்படும் வாயு மாசு, சூழல் மாசு, நீர் மாசு உள்ளிட்ட பல சுற்றாடல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளதுடன், அதன்படியே நிலைபேறான பசுமை நகரங்கள் தொடர்பில் உலகத்தின் கவனம் திரும்பியுள்ளது.

நகர வன வளத்தை உருவாக்குவதனூடாக சுற்றாடல் பிரச்சினைகள் குறைவது மாத்திரமன்றி சுற்றாடல் அழகாகும் என்பதால் கொங்க்ரீட் வலயங்களுக்குப் பதிலாக இயற்கைத் தன்மையை நுகரக்கூடிய பசுமை வலயத்தில் மக்கள் வாழ்வதற்கு வழிவகுக்கும். அது உடல் - உள ரீதியான ஆரோக்கியமான மக்கள் சமூகத்தை உருவாக்கவும் வழிவகுக்கும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு மாநகர சபை, இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களம், கரையோர பாதுகாப்பு மற்றும் கடல் வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பலரும் இந்தத் திட்டத்துடன் கைகோர்த்துக்கொண்டுள்ளனர்.

## சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவைச் சந்தித்தார் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் கார்மென் மொரினோ



ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் கார்மென் மொரினோ (Carmen Moreno) அண்மையில் (17) சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவைச் சந்தித்தார். இச்சந்திப்பில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை பாராளுமன்றம் என்பவற்றுக்கிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்தி எதிர்காலத்தில் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது பிரதானமாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், இங்கு கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் இலங்கையின் புதிய அரசியல் மற்றும் புதிய அரசியல் கலாசாரம் தொடர்பில் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை, சுற்றுலாத்துறை போன்ற துறைகள், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்கின்றமை குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

## லங்கா சதொச நிறுவனம் மோசடியின் குகை: 448 விற்பனை நிலையங்களில் 252இல் நிதி நெருக்கடி!

### அமைச்சர் வசந்த சமரசிங்க சுட்டிக்காட்டு



லங்கா சதொச நிறுவனம் மோசடியின் குகை என்று குறிப்பிட வேண்டும். 2014ஆம் முதல் கடந்த ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்திரம் சதொச நிறுவனத்தின் தலைமை களஞ்சியசாலையிலிருந்து 350 மில்லியன் தொகை பொருட்கள் வெளியில் சென்றுள்ளன. ஆனால், அந்தப் பொருட்கள் தொகை விற்பனை நிலையங்களுக்கு வந்தடையவில்லை எனத் தெரிவித்த வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, இந்த ஆண்டு மார்ச் மாதமளவில் 40 வகையான அத்தியாவசிய பொருட்களின் விலைகள் 20 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாட்களில் லங்கா சதொச விற்பனை நிலையங்களூடாக அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் பேசுகையில்,

லங்கா சதொச நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தைப் பொறுப்பேற்கும்போது லங்கா சதொச நிறுவனம் 2,200 கோடி ரூபா நஷ்டத்தை எதிர்கொண்டிருந்தது. நாடளாவிய ரீதியிலுள்ள 448 விற்பனை நிலையங்களில் 252 விற்பனை நிலையங்கள் மிக மோசமான நிதி நெருக்கடியை எதிர்கொண்டிருந்தன. தற்போது நஷ்டத்தை முகாமைத்துவம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலப்பகுதியில் லங்கா சதொச நிறுவனத்துடன் இணைந்ததாக நாடளாவிய ரீதியில் 150 கடைகளைத் திறக்கவுள்ளோம்

லங்கா சதொச நிறுவனம் மோசடியின் குகை என்று குறிப்பிட வேண்டும். 2014ஆம் முதல் கடந்த ஆண்டு வரையான காலப்பகுதியில் மாத்திரம் சதொச நிறுவனத்தின் தலைமை களஞ்சியசாலையில் இருந்து 350 மில்லியன் தொகை பொருட்கள் வெளியில் சென்றுள்ளன. ஆனால், அந்த பொருட்கள் தொகை விற்பனை நிலையங்களுக்கு வந்தடையவில்லை. இந்த மோசடி தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம்.

இறக்குமதி செய்யப்படும் அரிசி தொகையில் ஒருகிலோ அடிப்படையில் 65 ரூபா வரி அறவிடப்படுவதாக எதிர்த்தரப்பினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். 65 ரூபா வரி 2023.05.18ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்துடன் விதிக்கப்பட்டுள்ளது. அரிசி தட்டுப்பாட்டுக்கு மத்தியில் அரிசி இறக்குமதி செய்யப்படும்போது இந்த வரியை நீக்கினால் விவசாயிகளும் சிறு அரிசி உற்பத்தியாளர்களும் பாதிக்கப்படுவார்கள். இவர்களை பாதுகாப்பதற்காகவே 65 ரூபா வரியை தொடர்ந்து அமுல்படுத்துகின்றோம்.

நஷ்டத்தை எதிர்கொண்டுள்ள லங்கா சதொச நிறுவனத்துக்கு 2023ஆம் ஆண்டு 300 சேவையாளர்களும் 2024 ஆண்டு 500 சேவையாளர்களும் முறையற்ற வகையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள். சதொச விற்பனை நிலையத்தை விடவும் சேவையாளர்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுகிறது. நெருக்கடியான சூழ்நிலையிலும் எவரையும் தொழிலிலிருந்து நீக்கவில்லை. முறையான வகையில் முகாமைத்துவம் செய்கிறோம்.

அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் குறித்து குற்றஞ்சாட்டப்படுகின்றது . 2024ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு மார்ச் மாதமளவில் 40 வகையான அத்தியாவசிய பொருட்களின் விலைகள் 20 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாட்களில் லங்கா சதொச விற்பனை நிலையங்களூடாக அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் - என்றார்.

## சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2022 – 2024 நிதி நிலைமைகள் குறித்து கணக்காய்வு

### பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவிப்பு



சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2022 முதல் 2024ஆம் ஆண்டுக்கான நிதி நிலைமைகள் கணக்காய்வு செய்யப்படுவதாக தெரிவித்த பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், நுவரெலியா நோர்வூட் மைதானத்தை விளையாட்டுத்துறை அமைச்சுக்குப் பொறுப்பாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (19) தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட எம்.பி. மஞ்சுள சுரவீர எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தொண்டமான் பயிற்சி நிலையம், கலாசார நிலையம், மற்றும் விளையாட்டு அரங்கம் ஆகியவற்றுக்கு பணியாட்தொகுதி 217 ஆகக் காணப்படவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், தற்போது 181 பேர் இந்த நிறுவனங்களில் சேவையாற்றுகிறார்கள்.

தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் 22 கட்டிடங்கள், 54 கணினிகள், 940 மேசைகள் மற்றும் கதிரைகள், 114 அலுமாரிகள், 3 முச்சக்கரவண்டிகள், 3 நகல் எடுப்பு இயந்திரங்கள், 1 மின்பிறப்பாக்கி, 15 மோட்டார் சைக்கிள்கள், 17 அச்சு இயந்திரங்கள், 4 நீர் நிரப்பிகள், சிற்றுண்டிச்சாலையில் 160 மேசை மற்றும் கதிரைகள், 1 நீர் பௌசர், 416 கட்டில்கள் மற்றும் மெத்தைகள், 662 மெத்தைகள் மற்றும் சமையலறை பொருட்கள் 5,296 உள்ளன.

2020ஆம் ஆண்டு மூலதனம் 0.5 மில்லியன் ரூபாவாகவும் தொடர் செலவுகள் 180 மில்லியன் ரூபாவாகவும் 2021ஆம் ஆண்டு மூலதனம் 1.5 மில்லியன் ரூபாவாகவும் தொடர் செலவுகள் 172 மில்லியன் ரூபாவாகவும் 2022ஆம் ஆண்டு மூலதனம் 30 மில்லியன் ரூபாவாகவும் தொடர் செலவுகள் 160.2 மில்லியன் ரூபாவாகவும் 2023ஆம் ஆண்டு மூலதனம் 14.1 மில்லியன் ரூபாவாகவும் தொடர் செலவுகள் 125 மில்லியன் ரூபாவாகவும் 2024ஆம் ஆண்டு மூலதனம் 15 மில்லியன் ரூபாவாகவும், தொடர் செலவுகள் 125 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டுள்ளது.

ஏனைய நிறுவனங்களின் சொத்துகள் தொடர்பான விபரங்களை சபைக்குச் சமர்ப்பிக்கிறேன். அத்துடன், 2022 முதல் 2024ஆம் ஆண்டுக்கான நிதி கணக்காய்வு தற்போது தயாரிக்கப்பட்ட நிலையில் உள்ளது - என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து மேலதிக கேள்விகளை முன்வைத்த ஆளும் தரப்பின் உறுப்பினர் மஞ்சுள சுரவீர, நுவரெலியா மாவட்டத்தில் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கான சூழல் அதிகளவில் காணப்படுகிறது. விளையாட்டுத்துறை தொடர்பான அதிகாரங்களும் தொண்டமான் மன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

நோர்வூட் விளையாட்டு மைதானம் நுவரெலியா மாவட்டத்தில் மிகவும் முக்கியமானது. உதைபந்தாட்ட போட்டியை நடத்துவதற்கு இந்த மைதானத்தின் தரம் சிறந்ததாகவுள்ளது. இந்த மைதானத்தை தொண்டமான் மன்றம் கைப்பற்றியுள்ளது. இதனால் அப்பிரதேசத்திலுள்ள இளைஞர், யுவதிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஏதேனும் விளையாட்டுப் போட்டி நடத்தப்படும்போது அதற்கு 15,000 ரூபா அறவிடப்படுகிறது. இதனால் தொண்டமான் மன்றம் வளர்ச்சி பெறுகிறது. தமது குடும்பச் சொத்தாக பயன்படுத்தப்படுகிறது. இதனை மாற்றிமைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்? - எனக் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதி அமைச்சர் பிரதீப், நுவரெலியா நோர்வூட் மைதானத்தை விளையாட்டுத் துறை அமைச்சுக்குப் பொறுப்பாக்குவதற்கு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளோம். எதிர்வரும் நாட்களில் இதற்கான பணிகள் முன்னெடுக்கப்படும் - என்றார்.

## முல்லையில் மூன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களைக் கையளித்தது தமிழரசுக் கட்சி



(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி மூன்று உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வேட்புமனுப் பத்திரங்களை நேற்று (19) கையளித்தது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்புமனுப் பத்திரங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கையெழுத்திட்டார்.

அதனைத்தொடர்ந்து கரைதுறைப்பற்று, துணுக்காய், புதுக்குடியிருப்பு ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்குரிய வேட்புமனுப் பத்திரங்களை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான துரைராசா ரவிகரன் கையளித்தார்.

முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள மாவீரன் பண்டாரவன்னியன் சிலைக்கு மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து இவ்வாறு குறித்த வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டன.

அத்தோடு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாந்தை கிழக்கு உள்ளூராட்சி மன்றத்துக்குரிய வேட்புமனுபத்திரம் இன்று (20) கையளிக்கப்படுமென இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பெருந்திரளான இலங்கைத் தமிழரசுக் கட்சித் தொண்டர்கள், உள்ளூராட்சிமன்ற வேட்பாளர்கள், மற்றும் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி வேட்புமனு தாக்கல் செய்தது!



(சி.திவியா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் செயற்பாடு கடந்த 17ஆம் திகதிமுதல் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் வவுனியா மாநகரசபையில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி நேற்று (19) தாக்கல் செய்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் கூட்டணியின் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் சகிதம் தமது வேட்புமனுவை நேற்று (19) மாலை தாக்கல் செய்தனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள நான்கு உள்ளூராட்சி மன்றங்களில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சங்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாணய மாற்று விதம் (19.03.2025)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 183.6648 | 193.1158 |
| கனேடியன் டொலர் | 202.6555 | 211.3038 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.5209 | 42.0976 |
| யூரோ | 317.4817 | 330.3817 |
| ஜப்பான் யென் | 1.9445 | 2.0207 |
| சிங்கப்பூர் டொலர் | 217.5521 | 227.3371 |
| ஸ்ரேலிங் பவுன் | 377.7683 | 391.9335 |
| சுவிஸ் பிராங் | 329.8012 | 345.3671 |
| ஐ.அ. டொலர் | 291.8071 | 300.3172 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 785.2624 |
| குவைட் | குவைட் தினார் | 961.3249 |
| ஓமான் | ஓமான் ரியால் | 768.9850 |
| கட்டார் | கட்டார் ரியால் | 81.2125 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய ரியால் | 78.9314 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.6034 |

# காட்டுயானைகளிடமிருந்து உயிரையும் உடைமையையும் பாதுகாக்குமாறுகோரி இலுப்படிச்சேனை மக்கள் கவனயீர்ப்பு

*செங்கலடி செய்தியாளர்*

காட்டு யானைகளிடமிருந்து தங்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாக்குமாறு கோரி மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்படிச்சேனை பகுதி மக்கள் புதன்கிழமை (19) காலை கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலுப்படிச்சேனை கிராம உத்தியோகத்தர் அலுவலகம் முன் வீதியோரத்தில் ஒன்றுகூடிய பிரதேச மக்கள் காட்டு யானைப் பிரச்சினைக்குத் தீர்வு கோரி, வேப்ப வெட்டுவான் - இலுப்படிச்சேனை பிரதான வீதி வழியாக இலுப்படிச்சேனை சந்தி வரை பேரணியாகச் சென்று இலுப்படிச்சேனை சந்தியில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

''காட்டுயானை பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும், அரசே கவனமெடு, வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளே எங்களுக்கு தீர்வைப்பெற்றுத்தா'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு சுமார் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.செங்கலடி - பதுளை வீதியை அண்டிய பகுதிகளில் கட்டு யானைகளால் சொத்துகள் சேதமாக்கப்பட்டு



அழிக்கப்பட்டுள்ளதுடன் உயிர் ஆபத்துகளும் ஏற்பட்டுள்ளன.

செவ்வாய்க் கிழமை (18) இரவு பலர்சேனை கிராமத்துக்குள் புகுந்த யானைகள் தென்னை மரங்களை துவம்சம் செய்துள்ளன.

கடந்த வாரம் சின்னபுல்லுமலை கிராமத்துக்குள் புகுந்த காட்டுயானைகள் இரண்டு வீடுகளை உடைத்து முற்றாகச் சேதமாக்கியுள்ளன.

காட்டு யானைகளின் பிரச்சினைகள் தொடர்பாக பல தடவைகள் முறைப்பாடு செய்தபோதிலும் இதுவரை தமக்கு தீர்வு கிடைக்கவில்லையென அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# அம்பாறை அரிசி ஆலை உரிமையாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்

## ஆதம்பாவா எம்.பி. தெரிவிப்பு

*மாளிகைக்காடு செய்தியாளர்*



''அம்பாறை மாவட்ட அரிசி உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுசென்று தீர்வைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்'' - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம் பாவா தெரிவித்தார்.

கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவு அரிசி ஆலை உரிமை யாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு சங்கத்தின் தலைவர் ஏ.எல்.பதுறுதீன் தலைமையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

''நாட்டின் நெல் மற்றும் அரிசி உற்பத்தியில் அம்பாறை மாவட்டம் பிரதான பங்கு வகிக்கிறது. நெல்லை அரிசியாக மாற்றி இந்தப் பிராந்தியத்துக்கும் நாட்டுக்கும் வழங்கும் அரிசி உற்பத்தியாளர்களின் பணி பாராட்டத்தக்கது.

நாட்டில் உள்ள முஸ்லிம் வர்த்தகர்கள் எமது நாட்டின் பொருளாதாரத்துக்கும் முன்னேற்றத்துக்கும் சகல வழிகளிலும் பெரும் பங்களிப்புகளைச் செய்து வருகின்றனர். அவர்கள் நாட்டுக்குரிய வர்த்தகர்களாக மாத்திரமல்லாமல் உற்பத்திகளை வெளிநாட்டுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடியவர்களாக மாறவேண்டும்.

இன்னும் ஓரிரு வருடங்களில் நாட்டில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளைப் போன்று எமது நாடும் மாற்றமடையும். இதற்கான பாரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன'' - என்றார்.

# மாவடிப்பள்ளி வயல் கண்டங்களில் தொடர்ந்து நிலைகொண்டுள்ள காட்டுயானைகள் கூட்டம்



## சிறுபோக நெற்செய்கைக்கு பெரும் தடையாக அமைவதாக விவசாயிகள் குற்றச்சாட்டு

அம்பாறை மாவட்டத்தின் மாவடிப்பள்ளி வயல் கண்டத்தில் காட்டு யானைகள் கூட்டமாக அப்பகுதியில் நிலைகொண்டுள்ளதால் மாவடிப் பள்ளி, காரைதீவு, சம்மாந்துறை, சாய்ந்தமருது, நிந்தவூர் போன்ற பல பிரதேசங் களில் பல்லாயிரக்கணக்கான வயல் நிலங்களில் சிறு போகம் செய்வதற்குரிய ஆரம்ப வேலைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பொத்துவில் காட்டுப்பகுதியை அண்டிய பகுதிகளிலிருந்து வருகை தரும் இந்தக் காட்டு யானைகள் கூட்டத்திலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும். அறுவடை காலங்களில் இரவு வேளைகளில் வயல் நிலங்களுக்குள் உட்புகுந்து நெற் செய்கையை துவம்சம் செய்வதால் தமது இவ்வருடத்தின் வாழ்வாதாரத் தொழில் இன்னும் பாரிய நட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறதென்றும் நெற்பயிரை இரவு வேளையில் யானைகளின் அழிவுகளிலிருந்து தாம் பாதுகாத்தாலும் அறுவடை ஆரம்பத்தில் இக் காட்டு யானைகள் கூட்டம் வருகை தந்ததால் கடந்த பெரும்போக நெற்செய்கையில் சில வயற் கண்டங்களில் அறுவடை மேற்கொள்ளவில்லையெனவும் கவலை வெளியிடுகின்றனர்.

ஏற்கனவே வெள்ளத்தில் அள்ளுண்டு போனதில் எஞ்சியுள்ள நெற்பயிரை இரவு பகலாகக் கண் விழித்திருந்து அறுவடை செய்ய வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ள தாகவும் அறுவடை முடிந்த பின்னும் தமது கிராமங்க ளுக்குள் இக்காட்டுயானைகள் உட்புகாமல் இருப்ப தற்கு தொடர்ந்தும் தாம் காவல் செய்வதாகவும் சிறுபோக நெற்செய்கைக்குரிய காலம் ஆரம்பித்தாலும் நூற்றுக்கணக்கான காட்டு யானைகள் வயல் வெளிகளில் தொடர்ந்து நிற்பதனால் தம்மால் சிறு போகம் செய்ய முடியாத நிலை ஏற்படலாம் என அப்பகுதி விவசாயிகள் அச்சம் வெளியிடுகின்றனர்.

மிகநீண்டகாலமாக காட்டுயானைகளின் தொல்லைகளும் அட்டகாசங்களும் அதிகரித்துள்ளதுடன், யானைகள் கிராமங்களுக்குள் உட்புகாமலிருப்பதற்காக யானைப் பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தும் அது இதுவரையில் நிறைவேறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விவசாய வாய்க்கால்களை புனரமைக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

## வவுணதீவு விவசாயிகளால் முன்னெடுப்பு



*கனகராசா சரவணன்*

மட்டக்களப்பு, கண்டியனாறு, அடைச்சகல் ஆகிய குளங்களையும் விவசாய வாய்க்கால்களையும் புனரமைக்குமாறு கோரி விவசாயிகள் செவ்வாய்க்கிழமை (18) வவுணதீவு பிரதேச செயலகத்தின் முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச விவசாயிகள் அமைப்புகள் ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து குறித்த தினம் காலை 09 மணிக்கு வவுணதீவு பிரதேச செயலகத்தின் முன்னால் விவசாயிகள் ஒன்றுதிரண்டனர்.

''மாகாண நீர்ப்பாசனத் திணைக்களமே வெளிப்படையாக வேலைகளைச் செய், கண்டியனாறு திட்டம் கைவிடப்பட்டதா?, அரச நிதியை பசளை, மானியம், நஷ்டஈடு என விரயம் செய்யவா?, அரச அதிகாரிகளே ஏன் எமது இளைஞர், யுவதிகள் வெளிநாடு செல்லவேண்டும்?, மாகாண நீர்ப்பாசனத் திணைக்களமே உப்பாற்றில் வீணாகச் செல்லும் நீரை விவசாயத்துக்கு பயன்படுத்த திட்டங்களைத் தீட்டு, 1600 ஏக்கர் விவசாயக் காணி, 4000 ஏக்கர் மேட்டுக்காணிகளுக்கு நீர் வழங்குவதற்கு ஏன் தயக்கம்?, விவசாயிகளை பிரித்தாழும் தந்திரம் வேண்டாம், அரசாங்க அதிபரின் அராஜகம் ஒழிக, பிரதேச அபிவிருத்தியின் நிலை என்ன பிரதேச செயலாளரே, மாவட்டத்தில் வெள்ள நிவாரணம் வழங்குவதுதான் அதிகாரிகளின் கடமையா?, விவசாயிகளே விழித்தெழுங்கள்'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு சுமார் ஒருமணித்தியாலம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.



**காத்தான்குடி நகர சபை உள்ளிட்ட மூன்று சபைகளில் போட்டியிட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் நேற்று(19) கட்டுப்பணம் செலுத்தியது. அதற்கமைவாக, மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி நகர சபை, மட்டக்களப்பு மாநகர சபை, மண்முனைப்பற்று பிரதேச சபை ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மரச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது. அதற்கான கட்டுப்பணம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தலைமையில் செலுத்தப்பட்டது.**

# ஓட்டமாவடி கிராமத்துக்குள் நுழையும் காட்டு யானைகளை விரட்டும் பணி முன்னெடுப்பு



*கல்குடா செய்தியாளர்*

ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை, மஜ்மா நகர் போன்ற கிராமங்களில் காட்டு யானைகளின் ஊடுருவல் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. மாலை வேளைகளில் இப்பிரதேசங்களுக்குள் ஊடுருவும் காட்டு யானைக் கூட்டம் இப்பிரதேச மக்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதுடன், மாலை வேளைகளில் கூட மக்கள் தங்கள் அன்றாட தேவைகளுக்கு சுதந்திரமாக நடமாட முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. இம்மக்கள் தொடர்ந்து சொத்தழிவுகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

பெறுமதியான மரங்கள், வீடுகள், வேலிகள் என்பவற்றை அழித்து நாசமாக்குவதுடன், மனித உயிரிழப்புகளும் இடம்பெற்றுள்ளன.

இப்பிரதேசத்தில் ஊடுருவிய காட்டு யானைகளை விரட்டும் பணிகள் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் தலைமையில் வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்போடு கல்குடா டைவர்ஸ் அனர்த்த அவசர சேவை, முனை முன்னேற்றக்கழகத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது.

சுமார் 16க்கும் மேற்பட்ட யானைகள் கூட்டமாக ஊடுருவ எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டதுடன், காட்டுப்பகுதிக்குள் விரட்டியடிக்கும் பணியும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இருப்பினும், நிரந்தரத்தீர்வின்றி தொடர்ச்சியாக காட்டு யானைகளின் அச்சுறுத்தல் தொடர்கதையாகவே உள்ளது.

இது தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரும் இணைந்து இதற்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பாடசாலையில் 'சிறந்த முன்மாதிரி' போட்டியில் ஜீ.எம்.எம்.எஸ். முதலிடம்



*மாளிகைக்காடு செய்தியாளர்*

கல்முனை கல்வி வலய மட்டத்தில் 2024-12-24 ஆம் திகதி நடைபெற்ற பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் 'சிறந்த முன்மாதிரி' (Best Practices Competition -2024) போட்டியில் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை (ஜீ.எம்.எம்.எஸ்.) முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

அதற்கான சான்றிதழும் வெற்றிக் கிண்ணமும் திங்கட்கிழமை (17) கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டத்தைத் தொடர்ந்து கல்முனை வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எச்.றியாஸாவின் நெறிப்படுத்தலில் வலயக் கணக்காளர் கே.லிங்கேஸ்வரனின் பங்குபற்றலுடன் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ்.நஜீம் தலைமையில் கிழக்கு மாகாணக் கணக்காய்வு அத்தியட்சகர் ஏ.நிஸாமினால் வழங்கப்பட்டன.

இந்த அடைவைப் பெற்ற பாடசாலைக்கு கல்விச் சமூகம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

# குச்சவெளி பிரதேச சபைக்காக ஈரோஸ் ஜனநாயக முன்னணி வேட்புமனு தாக்கல்



*சீனக்குடா செய்தியாளர்*

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச சபைக்காக ஈரோஸ் ஜனநாயக முன்னணி நேற்று (19) வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தது.

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் எஸ். கே.சந்திரனால் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது. இதன்போது அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

''கட்சியின் அடையாளத்தைப் பாதுகாப்பதற்காக இந்தத் தேர்தலில் நாங்கள் போட்டியிடுகின்றோம். இதற்காக, இளைஞர்கள், யுவதிகள் மற்றும் ஊடகவியலாளர்களையும் எங்களுடைய வேட்பாளர் பட்டியலில் இணைத்துள்ளோம். கிராமங்களிலிருந்து அபிவிருத்தி வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பது எங்களுடைய நோக்கமாகும். அதற்காக குச்சவெளி பிரதேச சபை யிலிருந்து எங்களுடைய பயணத்தை ஆரம்பித்திருக்கிறோம்.

ஊழல் மற்றும் துஷ்பிரயோகங்கள் அற்ற ஒரு கிராம ஆட்சியை குச்சவெளி பிரதேசத்தில் ஏற்படுத்துவதற்காக இளைஞர்களும் யுவதிகளும் எங்களோடு கைகோர்த்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

10 ஆசனங்களைக் கொண்ட குச்சவெளி பிரதேச சபையில், 29,540 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். தென்னமரன்வடி (2,794), புல்மோட்டை (2,720), அரபாத்நகர் (3,324), திரியாய் (2,197), ஜயா நகர் (2,416), குச்சவெளி (1,181), கும்புருப்பிட்டி (3,040), இறக்கண்டி (2,767), நிலாவெளி (3,390), இக்பால் நகர் (4,270) ஆகிய வட்டாரங்கள் குச்சவெளி பிரதேச சபையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.





**சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (17) நடைபெற்றது. இந்நிகழ்வில் நோன்பின் மாண்புகள் பற்றி சம்மாந்துறை ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவர் மௌலவி எம்.எல்.எம். பஷீர் மார்க்கச் சொற்பொழிவு நிகழ்த்தினார். மேலும், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்ததோடு முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டிருந்தனர்.** **படங்கள்:** நாவிதன்வெளி செய்தியாளர்

# தமிழர் விடுதலைக் கூட்டணி இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடாது

## கட்சியின் செயலர் ஆனந்தசங்கரி அறிவிப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணி இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் நாயகத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அனுப்பி வைத்த கடிதத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்க்க முடியாத காரணத்தினால் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்ய முடியவில்லை எனத் தெரிவிக்கிறோம் – என்றுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிர்வாகம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் கலந்துரையாடல்





*பு.கஜிந்தன்*

பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை பரிசீலிப்பதற்கான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (18) அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர்,

பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின்போது வழங்கிய ஒத்துழைப்புக்கமைய, இம்முறையும் வினைத்திறனாக செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், எமது மாவட்டத்துக்கு புதிதாக நியமனம் பெற்று வந்துள்ள தேர்தல் ஆணையாளர் இ. சசீலனை வரவேற்பதாகவும் இடமாற்றம் பெற்றுச்சென்ற உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜுக்கு தங்கள் அனைவரின் சார்பிலும் தமது நன்றியைத் தெரிவித்ததுடன், தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெற அனைவரது ஒத்துழைப்பையும் நல்குமாறு கேட்டுக்கொண்டார்.

பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை பரிசீலிப்பது தொடர்பான கடமைகள், பொறுப்புகள் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலனால் விளக்கமளிக்கப்பட்டது.

# 07 துறைசார் மேற்பார்வைக் குழுக்களை அமைக்க பாராளுமன்றத்தில் அங்கீகாரம்

பத்தாவது பாராளுமன்றத்தில் 07 துறைசார் மேற்பார்வைக் குழுக்களை அமைப்பது தொடர்பான பிரேரணை சபையில் அங்கீகரிக்கப்பட்டது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய, சபைமுதல்வர், அமைச்சர் பிமல் ரத்நாயக்கவினால் குறித்த பிரேரணை கடந்த திங்கட்கிழமை (17) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், இதற்கு சபை அங்கீகாரம் வழங்கியது. இதற்கமைய குறித்த துறைசார் மேற்பார்வைக் குழுக்களுக்கான தலைமைத்துவங்கள் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி மத்தியில் பகிர்ந்தளிக்கப்படும் முறைக்கும் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய, பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பரிணாமம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு மற்றும் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு ஆகிய நான்கு குழுக்களின் தலைமைப் பொறுப்புகளை ஆளுங்கட்சிக்கு வழங்கவும் இணங்கப்பட்டது.

அதேபோல, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் தலைமைப் பதவிகளை எதிர்க்கட்சிக்கு வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டது.

# வீடுடைத்து திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர் வெல்லவாயவில் கைது

*எம்.ஏ.எம்.ஹசனார்*


வெல்லவாய பகுதியில் வீடு உடைத்து திருட்டுச் செயலில் ஈடுபட்ட நபர் கைதுசெய்யப்பட்டதுடன், திருட்டுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

வெல்லவாய, மஹவலமுல்ல, யாலபோவ போன்ற பல்வேறு பிரதேசங்களில் வீடு உடைத்து திருட்டுச் செயலில் ஈடுபட்டுவரும் நபர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்று முன்தினம் (18) அப்பகுதியை சுற்றிவளைத்த வெல்லவாய பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்ததுடன் திருடப்பட்ட பொருட்களையும் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவித்தனர்.

திருடப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள், தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் இதர மின்சாதனப் பொருட்கள் பலவற்றை கைப்பற்றியுள்ளதாகவும் சந்தேகநபர் தடுப்புக் காவலில் வைத்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வெல்லவாய குற்றவியல் பொலிஸார் தெரிவித்தனர்.

# அரசாங்க தகவல் திணைக்களத்தில் ஊடகர்களுக்கான இப்தார் நிகழ்வு





*அஸ்ரப் ஏ. சமத்*

''நாடு எனும் ரீதியில் முன்னேறிச் செல்ல வேண்டுமாயின் பேதங்களை மறந்து அனைவரும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியம்'' என அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சருமான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கலாசார நிகழ்வுகள் இனங்களுக்கிடையிலான உறவை வலுப்படுத்த வழிவகுப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் (18) முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இப்தார் நோன்பு துறக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டே அவர் இதனை தெரிவித்தார்.

செய்தி ஒன்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஊடகவியலாளர்களை சாரும் என்று நிகழ்வில் விசேட அதிதியாக கலந்துகொண்ட தேசிய ஒருமைப்பாட்டு பிரதியமைச்சர் முனீர் முழப்பர் தெரிவித்தார். முஸ்லிம்களின் புனித வேத நூலான அல்குர்ஆனிலும் இது வலியுறுத்தப்பட்டுள்ளதாக வும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வு, அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே.ஜே.பண்டாரவின் பூரண வழிகாட்டலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

முஸ்லிம் எய்ட் நிறுவனமும் கிண்ணியாவில் இயங்கும் குளோபல் எஹ்ஸான் ரிலீப் நிறுவனமும் இந்நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழப்பு!

*பு.கஜிந்தன்*

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதனார்மடம் பகுதியில் நேற்று முன்தினம் (18) இரவு இடம்பெற்ற விபத்தில் 75 வயது முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மருதனார்மடத்தடியில் இருந்து உரும்பிராய் நோக்கிச்ச சென்ற மோட்டார் சைக்கிளுடன், சைக்கிளில் வந்த குறித்த முதியவர் மோதுண்டுள்ளார். இந்நிலையில் காயமடைந்த இருவரும் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இருப்பினும், சைக்கிளில் பயணித்த முதியவர் உயிரிழந்துள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹெரோயினுடன் பஸ்ஸில் பயணித்தவர் கைது

*எம்.ஏ.அமீனுல்லா*

கொழும்பிலிருந்து கண்டிக்கு 25 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கெப்சூல்களை மறைத்து கொண்டுவந்த 63 வயதுடைய பெண் ஒருவர் நேற்று முன்தினம் (18) பிற்பகல் சந்தேகத்தின்பேரில் கண்டி பொலிஸ் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் இதற்கு முன்னரும் கைதுசெய்யப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பிலிருந்து இ.போ.சவுக்குச் சொந்தமான பஸ்ஸில் கண்டியை நோக்கி வந்து கொண்டிருந்தபோது, ஹீரஸ்ஸகல சந்தியில் பொலிஸார் பஸ்ஸை நிறுத்தி சோதனையிட்டபோது, குறித்த பெண் மறைத்து வைத்திருந்த போதைப்பொருள் அடங்கிய பையை தரையில் போட்டுள்ளார். அப்போது, அதைப் பார்த்த பொலிஸ் அதிகாரி உடனடியாக அவரை கைதுசெய்தார்.

கொழும்பு, பஞ்சிகாவத்தை பகுதியிலிருந்து தான் போதைப்பொருளை பெற்றதாகவும் அதனை தெரிந்த சிலருக்கு விற்பனை செய்வதாகவும் சந்தேகநபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.கண்டி பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதம பொலிஸ் பரிசோதகர் திலக் சமரநாயக்க தலைமையில் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் இருவருக்கு 06 மாத சிறைத்தண்டனை

## 04 பேர் நிபந்தனையுடன் விடுதலை

*பு.கஜிந்தன்*

நெடுந்தீவு கடற்பரப்பில் 02 படகுகளுடன் கடந்த மாதம் 20ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 06 பேருடைய வழக்கு நேற்று (19) ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

சிறைச்சாலை அதிகாரிகளால் 06 மீனவர்களும் நேற்று (19) நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். வழக்கினை ஆராய்ந்த நீதவான் 06 பேரில் 04 பேருக்கு ஆறு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனை வழங்கி நிபந்தனையுடன் விடுதலை செய்தார்.

இந்த 06 பேரில் இருவர் படகோட்டிகள் என்பதால் அவர்களுக்கு ஆறுமாத கடூழிய சிறைத்தண்டனை வழங்கி உத்தரவிடப்பட்டிருந்தது. அத்துடன் படகோட்டிகள் இருவருக்கும் தலா நான்கு மில்லியன் ரூபா அபராதத் தொகையும் விதிக்கப்பட்டது.

இதனை செலுத்தத் தவறின் மேலும் 03 மாத சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டிருந்தார். கடந்த மாதம் 20ஆம் திகதி நெடுந்தீவு கடலில் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை இலுவைப் படகுகளுடன் கடற்படையினர் இவர்களை கைது செய்திருந்தனர்.

# உண்ணாநோன்பிருந்து உயிர்நீர்த்த அன்னை பூபதியின் நினைவேந்தல் வாரம் மட்டக்களப்பில் ஆரம்பம்

*வீரமுனை செய்தியாளர்*



இந்திய இராணுவத்தை வெளியேறக் கோரியும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க விடுதலைப்புலிகளுடன் இலங்கை அரசை பேச்சுவார்த்தைக்கு செல்லுமாறு கோரியும் உண்ணாநோன்பிருந்து உயிர்நீர்த்த அன்னை பூபதியின் நினைவேந்தல் வாரம் நேற்று (19) மட்டக்களப்பு நாவலடியில் உள்ள அன்னை பூபதியின் நினைவுத்தூபியில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அன்னை பூபதி நினைவேந்தல் செயற்பாட்டுக் குழு மற்றும் அன்னை பூபதியின் குடும்ப உறுப்பி னர்களினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

சிவில் செயற்பாட்டாளர் செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அருட்தந்தை த.ஜீவராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது நினைவுத்தூபியில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

1988ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரை வெளியேறுமாறு கோரி 08 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து அன்னை பூபதியம்மா மட்டக்களப்பு, மாமாங்கேஸ்வர ஆலய முன்றிலில் மார்ச் 19ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டு ஏப்ரல் 19ஆம் திகதி உயிர்நீத்தார்.

இதனை முன்னிட்டு 37ஆவது ஆண்டு நினைவாக இம்முறையும் வடகிழக்கில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கைதுசெய்யச் சென்ற பொலிஸார் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பியோடிய நபர்

*பு.கஜிந்தன்*

சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்யச் சென்ற பொலிஸார் மீது சந்தேகநபர் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் (18) யாழ்., தெல்லிப்பழையில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த சந்தேகநபரை கைதுசெய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது. இந்நிலையில் நீதிமன்றத்தின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக தெல்லிப்பழை பொலிஸார் குறித்த சந்தேகநபரை கைதுசெய்வதற்குச் சென்றனர்.

இதன்போது குறித்த சந்தேகநபர் தகாத வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகித்து, பொலிஸார் மீது தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.தாக்குதலுக்குள்ளான பொலிஸ் உத்தியோகத் தர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

குறித்த சந்தேகநபரை கைதுசெய்ய தெல்லிப்பழை பொலிஸார் வலைவீசி வருகின்றனர்.

# மாத்தளையில் 10 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களை தாக்கல்செய்த தேசிய மக்கள் சக்தி




*எம்.ஏ.அமீனுல்லா*

மாத்தளை மாவட்டத்தில் 10 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களை தேசிய மக்கள் சக்தி நேற்று (19) மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி திருமதி தேஜானி திலகரத்ன முன்னிலையில் சமர்ப்பித்தனர்.

இந்த வருட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை மாநகர சபை, தம்புள்ளை மாநகர சபை, இரத்தோட்ட, உக்குவெல, நாவுல, பல்லேபொல, கலேவெல, லக்கல, வில்கமுவ, அம்பங்க ஆகிய பிரதேச சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்புமனுக்களை சமர்ப்பித்துள்ளனர்.

இந்நிகழ்வில் புத்தசாசன, சமய அலுவல்கள், கலாசார பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

# கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

*அநுராதபுரம் நிருபர்*

இரண்டு கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் அநுராதபுரம் உளுக்குளம் முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய அநுராதபுரம் யாழ்ப்பாணம் சந்தி பகுதியில் நேற்று நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டதுடன் அவரிடமிருந்து கேரள கஞ்சாவும் அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர் 35 வயதுடைய அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபரை விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரச ஊழியர்களுக்கு ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டுமென அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கம் போராட்டம்

*திராய்க்கேணி நிருபர்*

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு முன்பாக அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க தலைவர் கபீர் கலீல் தலைமையில் நேற்று (19) இடம்பெற்றது.

இதன்போது புதிய வரவு - செலவுத் திட்டத்தில் ஆகக் குறைந்த சம்பள அதிகரிப்பாக 20,000 ரூபா வழங்கப்பட வேண்டும் என்றும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கேட்டுக் கொண்டனர்.

ஏற்கனவே அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட 7,500 ரூபா விசேட கொடுப்பனவு புதிய வரவு - செலவுத் திட்டத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ச்சியாக வழங்குமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.



## கிளீன் ஸ்ரீலங்கா இலக்குகளை அடைவதற்காக வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டை திறம்பட பயன்படுத்தல் தொடர்பில் கலந்துரையாடல்



அரசாங்கத்தின் முதன்மைத் திட்டமாக செயற்படுத்தப்படும் கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்துக்காக இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 05 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டை, வேலைத்திட்டத்தின் முதன்மை நோக்கங்களை அடைவதற்கு திறம்பட பயன்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல், கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தின் மேலதிக செயலாளர் பொறியியலாளர் எஸ்.பி.சி. சுகீஸ்வர தலைமையில் நேற்று முன்தினம் (18) கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் உள்ள சார்டட் கட்டிடத்தில் நடைபெற்றது.

நாட்டில் ஒழுக்கநெறி, சமூக மற்றும் சூழல் என்ற அனைத்து துறைகளிலும் புதிய மாற்றத்தை எதிர்பார்த்து, கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டம் நாடு முழுவதும் செயற்படுத்தப்பட்டுள்ளது.

கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டம் தொடர்பில் ஒவ்வொரு நிறுவனமும் செயற்படுத்த முன்மொழியப்பட்டுள்ள திட்டங்கள், அதன்போது எழுந்துள்ள சவால்கள் மற்றும் நிதித் தேவைகள் குறித்து விரிவாக இதன்போது கலந்துரையாடப்பட்டன. அதன்படி, குறித்த அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கான முன்னுரிமைகள் அடையாளம் காணப்பட்டு, நிதி ஒதுக்கீடுகளை வழங்குவது குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, இலங்கை போக்குவரத்து சபை, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, நகர அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு, நிதி ஆணைக்குழு, மேல் மாகாண மாநகர சபை, மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகாரசபை போன்ற துறைசார் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தின் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## அச்சுறுத்தலுக்கு அடிபணியாமல் தமது பணியை ஆற்றுமாறு தென் மாகாண பொலிஸ் உயரதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து



எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் அடிபணியாமல் தமது பணியை ஆற்றுமாறு தென் மாகாண பொலிஸ் உயரதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அதற்காக அரசியல் அதிகாரத் தரப்பு என்ற வகையில் வசதிகளை வழங்க தமது அரசாங்கம் தயாரெனவும் தெரிவித்தார்.

தென் மாகாண பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் (18) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் அடிப்படைச் சட்டத்துக்கு அனைவரும் அடிபணிய வேண்டுமெனவும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பொலிஸ் திணைக்களத்தை சார்ந்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

திட்டமிட்ட வன்முறை செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான வன்முறைகள் தொடர்பான தரவுகள் குறித்து தென் மாகாண பொலிஸ் உயரதிகாரிகள் இதன்போது ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியதுடன், குற்றத் தடுப்புக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதன்போது பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அழுத்தங்களின்றி பிரஜைகளின் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்கும் செயற்பாடுகளை பலப்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதன்போது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் தென் மாகாண பொலிஸ் பிரதானிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## கொட்டாஞ்சேனை கிழக்கு வட்டாரத்தில் ஐ.தே.கவில் போட்டியிடும் லுஷாந்தன்



கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வடகொழும்பு கொட்டாஞ்சேனை கிழக்கு வட்டாரத்தில் துரைராஜா லுஷாந்தன் (கார்த்திக்) போட்டியிடவுள்ளார்.

நேற்று முன்தினம் (18) இதற்கான வேட்புமனுப் பத்திரத்தில் அவர் கையெழுத்திட்டார்.

இங்கு அவர் கூறுகையில்,

இந்தக் கனவை நனவாக்க உங்கள் ஆதரவையும் ஆசீர்வாதத்தையும் நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். நாம் ஒன்றாக இணைந்து, வலிமையான மற்றும் வளமான கொழும்பை உருவாக்கலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை எனத் தெரிவித்தார்.

இவர் கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவர் என்பதுடன், இளைஞர் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினருமாவார்.

## உலக மீள் சுழற்சி தினத்தில் பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிக்க மின்சார முச்சக்கரவண்டி அறிமுகம்



“உலக மீள்சுழற்சி தினத்தை” (World Recycling Day) முன்னிட்டு பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிப்பதற்காக சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சார முச்சக்கர வண்டி (Electronic Tree-Wheeler - E-Tuk) அறிமுகப்படுத்தும் முன்னோடித் திட்டம் நேற்று முன்தினம் (18) தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் முன்னோடித் திட்டம் முதலில் வாதுவ பிரதேசத்தில் செயற்படுத்தப்படவுள்ளது.

இந்த சுற்றுச்சூழலுக்கு உகந்த மின்சார முச்சக்கர வண்டி வீடுகள் மற்றும் நிறுவனங்களுக்குச் சென்று எந்தவிதமான பிளாஸ்ரிக் கழிவுகளையும் சேகரிக்கும். மேலும், பிளாஸ்ரிக் கழிவுகளை வழங்குபவர்களுக்கு பணமும் வழங்கப்படும். பின்னர் இந்த பிளாஸ்ரிக் கழிவுகள் முறையாக மீள்சுழற்சிக்கு அனுப்பப்படும்.

இதன் தொடக்க விழா நேற்று முன்தினம் (18) பத்தரமுல்ல, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதான அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

## கொழும்பு கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி





கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் சுகததாச விளையாட்டு மைதானத்தில் அதிபர் ஜீ.கிருஷ்ணவதனி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கொழும்பு வலய கல்விப் பணிப்பாளர் பி.ஆர்.தேசபந்து கலந்து சிறப்பித்தார்.

இவ் விளையாட்டுப் போட்டியில் ‘சம்பந்தர், சுந்தரர், அப்பர்’ ஆகிய மூன்று இல்லங்களையும் சேர்ந்த மாணவிகள் பல்வேறு போட்டிகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

விளையாட்டுப் போட்டியில் மாணவிகளின் திறமைகள் மட்டுமல்லாமல், அவர்களின் படைப்பாற்றலும் கவனத்தில் கொள்ளப்பட்டது. இல்லங்களுக்கிடையிலான இலட்சினைகளை கழிவுப் பொருட்களைக் கொண்டு மாணவிகள் உருவாக்கியிருந்தனர். இந்த முயற்சியில் மூன்று இல்லங்களும் தங்களது திறன்களை வெளிக்காட்டியிருந்த போதிலும், ‘அப்பர்’ இல்லத்தைச் சேர்ந்த மாணவிகளின் இலட்சினையானது 100 சதவீத கழிவுப் பொருட்களால் ஆக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது நடுவர்களை வெகுவாக கவர்ந்தது. ஆகையால் இலட்சினைக்கான முதலாம் இடத்தை ‘அப்பர்’ இல்லம் பெற்றுக் கொண்டது. விளையாட்டுப் போட்டியில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. மாணவிகள் உற்சாகத்துடன் அனைத்து விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றினர். ஓட்டப் பந்தயம், தடை தாண்டும் ஓட்டம், குண்டு எறிதல், வலைப்பந்து, உயரம் பாய்தல், நீளம் பாய்தல் போன்ற பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

இறுதியில் அனைத்து போட்டிகளிலும் மாணவர்கள் சிறப்பான திறமையை வெளிப்படுத்தியிருந்த போதிலும், அதி கூடிய புள்ளிகளைப் பெற்று ‘சம்பந்தர்’ இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. ஏனைய இரண்டு இல்லங்களும் சென்ற வருடங்களை விட கூடிய புள்ளிகளைப் பெற்று அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றது.

இந்த விளையாட்டுப் போட்டியானது திறமைக்கான தளமாக காணப்பட்ட அதேவேளை, சூழல் நேயமானதாகவும் காணப்பட்டது.

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. போட்டியில் பங்கெடுத்த மாணவிகள் மற்றும் ஊக்கப்படுத்திய ஆசிரியர்களை பாடசாலை நிர்வாகம் பாராட்டியது. இது வெற்றிகரமான நிகழ்வாக அமைந்ததோடு, மாணவிகளதும் ஆசிரியர்களதும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அனைவரையும் கவர்ந்தது.

## அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் முன்னணியின் இப்தார் நிகழ்வு



ஏ.எஸ்.எம்.ஜாவித்

அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் முன்னணியின் இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் (18) முன்னணியின் தேசியத் தலைவர் அம்ஹர் ஷெரிப் தலைமையில் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தின் ஏ.எம்.ஏ.அஸீஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி,கௌரவ அதிதிகளாக துருக்கி நாட்டின் தூதுவர் மற்றும் மாலைதீவு நாட்டின் கவுன்சிலர் அலி சரீப் ,சிறப்பு அதிதிகளாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ், முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் வை.எல்.எம்.நவவி, முன்னணியின் சமய விவகாரப் பிரிவு தலைவர் பௌஸான் அன்வர், முன்னணியின் முன்னாள் தலைவர்கள், செயலாளர்கள், நாடளாவிய ரீதியில் உள்ள அங்கத்தவர்கள், உலமாக்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



இதன்போது வரவேற்புரையை முன்னணியின் தலைவர் அம்ஹர் ஷெரிப்,நன்றி உரையை முன்னணியின் பொதுச் செயலாளர் ஆசிப் சுக்ரி ஆகியோர் நிகழ்த்தினர்.

## மலேஷியாவின் கோலாலம்பூர் மாநகருக்கு நேரடி விமான சேவையை ஆரம்பிக்கும் FitsAir




இலங்கையில் தனியாருக்குச் சொந்தமாக இயங்குகின்ற முதலாவது சர்வதேச விமானசேவையான FitsAir, மலேஷியாவின் கோலாலம்பூர் மாநக ருக்கு நேரடி விமான சேவைகளை ஆரம்பித்து, பிராந்தியங்களுக்கு இடையிலான ஆகாய போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்தியுள்ளதுடன், நாட்டில் சிக்கனமான கட்டணங்களில் கிடைக்கப்பெறும் விமான சேவை என்ற தனது ஸ்தானத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

2025 ஏப்ரல் 04 முதல் கோலாலம்பூருக்கான விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், வாரந்தோறும் நான்கு சேவைகள் இடம்பெறவுள்ளன. சிக்கனமான கட்டணங்களுடன், நம்பிக்கை மிக்க விமானப் போக்குவரத்தை நாடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலையில், அந்த தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான இவ்விமானசேவையின் முயற்சிகளை இந்த விஸ்தரிப்பு பிரதிபலிப்பதுடன், பிராந்திய விமான சேவைகள் துறையில் ஒரு முக்கிய தொழிற்பாட்டாளர் என்ற தனது ஸ்தானத்தையும் இதன்மூலமாக மீளவும் உறுதிப்படுத்தியுள்ளது.

பிராந்தியத்தில் தனது சேவைகளை மேம்படுத்தி, மேலும் பல நகரங்களுக்கு விரிவுபடுத்தும் முயற்சிகளை FitsAir தொடர்ந்தும் முன்னெடுத்து வரும் நிலையில், கோலாலம்பூருக்கான விமான சேவைகளின் ஆரம்பம் மிகவும் முக்கியமான ஒரு சாதனை இலக்காக மாறியுள்ளது. இப்புதிய மார்க்கமானது வர்த்தகம், உல்லாசப் பிரயாணம் மற்றும் போக்குவரத்து தொடர்பில் மகத்தான வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதுடன், விமானப் போக்குவரத்தை அனைவரும் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு சிக்கனமான கட்டணங்களில் அவற்றை வழங்குவதில் இவ்விமானசேவை கொண்டுள்ள அர்ப்பணிப்பை மீள உறுதிப்படுத்தியுள்ளது.

இவ்விமானசேவையின் ஆரம்பத்தைக் குறிக்கும் வகையில் கோலாலம்பூருக்கான இரு வழிச் சேவையை ரூபா 65,300 என்ற விசேட அறிமுக சலுகைக் கட்ட ணத்துடன் FitsAir வழங்குகின்றது. 20 கிலோ பிரயாணப் பொதி மற்றும் கையில் எடுத்துச் செல்லும் 07 கிலோ பொதி ஆகியவற்றுடன், அனைத்தும் உள்ளடங்கிய இக்கட்டணம் அறவிடப்படுவதுடன், நிம்மதியான பிரயாண அனுபவத்தை உறுதி செய்கின்றது.

இப்புதிய சேவையுடன், தனது வலையமைப்பை மேலும் விரிவுபடுத்தி, தனது பிரயாணிகளுக்கு சிக்கனமான, நிம்மதியான பிரயாணத் தெரிவுகளை FitsAir தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. விமானசேவையின் வலையமைப்பானது மாலே, டுபாய், டாக்கா மற்றும் சென்னை உள்ளிட்ட மாநகரங்களுடன் தொடர்ந்தும் வளர்ச்சி கண்டு வருவதுடன், கொழும்பிலுள்ள பிரதான மையத்தினூடாக மேற்குறிப்பிட்ட மாநகரங்களுக்கிடையிலான இடைவிடாத இணைப்புச் சேவைகளையும் வழங்குகின்றது. பாதுகாப்பு மற்றும் வாடிக்கையாளர்களின் திருப்தி ஆகியவற்றின் மீது அதீத கவனத்துடன், நம்பகமான, குறித்த நேரம் தவறாத சேவைகளை வழங்குவதில் FitsAir தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளது.


Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

www.thamilan.lk
வியாழக்கிழமை, மார்ச் 20, 2025
தமிழன்

# ஹொண்டுராஸ் விமான விபத்தில் 12 பேர் உயிரிழப்பு



ஹொண்டுராஸில் ரோவாடன் தீவிலிருந்து லான்சா எயார்லைன்ஸ் விமான நிறுவனத்தின் சிறிய ரக வர்த்தக விமானமொன்று 17 பயணிகளுடன் கடந்த திங்கட்கிழமை இரவு லா சீபா நகர் நோக்கிச் சென்ற நிலையில், விமானம் கடலில் விழுந்து நொறுங்கியது.

இவ்விபத்தில் பிரபல இசையமைப்பாளர் உள்ளிட்ட 12 பேர் உயிரிழந்தனர். 5 பேர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர். இவ்விபத்தில் பிரபல இசையமைப்பாளர் ஆரெலியோ மார்டினெஜ் சுவாஜோவும் பலியானார். கரிபுனா மற்றும் மிஸ்கிடோ மொழிகளில் திறமை வாய்ந்த அவர், அவை இரண்டிலும் இசையமைக்கும் திறன் பெற்றவராக இருந்துள்ளார். அவருடைய இசை ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா மற்றும் பிற நாடுகளிலும் பிரபலமென்பது குறிப்பிடத்தக்கது.

## 30 நாட்கள் அமுலுக்கு வரும்...

# ரஷ்ய - உக்ரைன் போர்நிறுத்தம்

## எண்ணெய் - எரிவாயு கட்டமைப்புகள் மீது தாக்குதல் இருக்காது - புட்டின் உறுதி



உக்ரைனுடனான போரை 30 நாட்களுக்குத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஒப்புதலளித்துள்ளார்.

மூன்றாண்டுகளைக் கடந்தும் நீடித்துவரும் ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரைநிறுத்தும் முயற்சியில் அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள ட்ரம்ப் ஈடுபட்டுள்ளார்.

சில நாட்களுக்கு முன், சவூதி அரேபியாவில் அந்நாட்டின் மத்தியஸ்தத்துடன் நடந்த பேச்சில், 30 நாட்கள் போர்நிறுத்த திட்டத்தை ரஷ்யா ஏற்றுக்கொண்டது. ஆனால், முடிவை அறிவிக்கவில்லை.

அது தொடர்பாக, ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன் ட்ரம்ப் நேற்றுமுன்தினம் (18) பேச்சு நடத்தினார். இரண்டு மணிநேரம் நடந்த இருவரின் பேச்சு முடிவில் இரு நாடுகளும் அறிக்கை வெளியிட்டுள்ளன. அதன்படி உக்ரைனின் எரிசக்தி உட்கட்டமைப்புக்கு எதிரான தாக்குதல்களை 30 நாட்கள் நிறுத்துவதற்கு புட்டின் ஒப்புக்கொண்டாரென அமெரிக்கா தெரிவித்துள்ளது. ரஷ்யாவும் இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அத்துடன், இரு நாடுகளும் தலா 175 போர்க் கைதிகளைப் பரிமாற்றம் செய்துகொள்ளவும் ஒப்புக்கொண்டுள்ளன. தங்கள் வசமுள்ள பலத்த காயமடைந்த உக்ரேனிய போர் வீரர்கள் 23 பேரை நல்லெண்ண நடவடிக்கையாக அந்த நாட்டிடம் ஒப்படைக்கவிருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

முழுமையான போர்நிறுத்தம் ஏற்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தை மத்திய கிழக்கு நாடுகளில் ஏதேனும் ஒன்றில் நடத்தப்படுமென்று தகவல் வெளியாகியுள்ளது.

# காஸா மீதான இஸ்ரேலின் வான் தாக்குதலில் 413 பேர் உயிரிழப்பு



காஸா மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் சுமார் 413 பேர் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இஸ்ரேல் - காஸா இடையே கடந்த ஜனவரி 19ஆம் திகதி தற்காலிக போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது. இந்நிலையில், காஸா மீது இஸ்ரேல் மிகப்பெரிய வான்வழித் தாக்குதலை நேற்றுமுன்தினம் நடத்தியது. காஸாவில் பத்துக்கும் மேற்பட்ட ஹமாஸ் இலக்குகளைக் குறிவைத்து இஸ்ரேல் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளது. இஸ்ரேல் தாக்குதலில் 413 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 660 பேர் காயமடைந்துள்ளனர்.

போர் நிறுத்தத்தை நீடிப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு எட்டப்படாததால்தான் தாக்குதல்களுக்கு உத்தரவிட்டதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு தெரிவித்துள்ளார்.

**''இது தொடக்கம் மட்டுமே...''**

மேலும் நெதன்யாஹு வெளியிட்ட பதிவில், ''காஸா மீது செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதல்கள் வெறும் தொடக்கம் மட்டுமே; இனிமேல் அனைத்து போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகளும் குண்டுமழைக்கு மத்தியில் நடைபெறும். ஹமாஸை அழிப்பது, அவர்களால் சிறை வைக்கப்பட்ட பணயக்கைதிகளை மீட்பதுதான் எங்களது போர் இலக்குகளாக உள்ளன'' எனத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் புனித ரமழான் மாதத்தில் நடத்தப்பட்ட இந்தத் திடீர் தாக்குதலால் தற்காலிகமாக நிலவிய அமைதி குலைந்து மீண்டும் முழு அளவிலான போர் மூளும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

மேலும், ஹமாஸ் பிடியிலிருக்கும் சுமார் 20இற்கும் மேற்பட்ட இஸ்ரேலிய பணயக்கைதிகளின் நிலையும் கேள்விக்குறியாகியுள்ளது. அவர்கள் இன்னும் உயிருடன் இருப்பதாக நம்பப்படுகின்றது. இதனிடையே போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக பிரதமர் நெதன்யாஹு மீது ஹமாஸ் குற்றஞ்சாட்டியுள்ளது. பணயக்கைதிகளின் உயிரை ஆபத்தில் ஆழ்த்தியதாகவும் எச்சரித்துள்ளது. இதனிடையே இஸ்ரேல் நடவடிக்கைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.

**ஐ.நா. அதிர்ச்சி**

இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல் அதிர்ச்சியளிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் ஆன்டனியோ குட்டேரெஸ் தெரிவித்துள்ளார்.

காஸாவில் போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டுமென்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். மேலும், காஸா மீதான இஸ்ரேல் தாக்குதலைத் தொடர்ந்து போர்நிறுத்தம் தொடர வேண்டுமென்று அவுஸ்திரேலிய பிரதமர் அல்பானீஸ் வலியுறுத்தியுள்ளார்.



## 287 நாட்களுக்குப் பின்னர்...

# பூமிக்குத் திரும்பினார் சுனிதா வில்லியம்ஸ்



## புளோரிடா கடற்பகுதியில் பத்திரமாக தரையிறங்கியது டிரகன் விண்கலம்



விண்வெளியிலுள்ள ஐஎஸ்எஸ் (ISS) எனப்படும் சர்வதேச விண்வெளி மையத்தில் ஒன்பது மாதங்களாக பணிபுரிந்துவந்த விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ் (வயது 59) மற்றும் புட்ச் வில்மோர் (வயது 62) ஆகியோர் நேற்று (19) அதிகாலை பூமிக்குத் திரும்பினர். அவர்களை சுமந்து வந்த ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் டிரகன் விண்கலம் நேற்று அதிகாலை 3.27 மணியளவில் அமெரிக்காவின் புளோரிடா அருகே பத்திரமாக கடலில் தரையிறங்கியது. மீட்புப்படையினர் அவர்களைப் பத்திரமாக மீட்டனர்.

சுனிதாவின் இந்த விண்வெளி பயணத்தினூடாக விண்வெளியில் அதிக நாட்களைக் கழித்த அமெரிக்க விண்வெளி வீரர்கள் வரிசையில் 2ஆவது இடம்பிடித்துள்ளார்.

**9 மாதங்களான 8 நாட்கள் பயணம்**

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தைச் சேர்ந்த விண்வெளி வீரர்களான சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் கடந்த ஆண்டு ஜூன் 05ஆம் திகதி அமெரிக்காவின் போயிங் நிறுவனம் தயாரித்த ஸ்டார்லைனர் என்ற புதிய விண்கலத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்றனர்.

அவர்களின் திட்டம் 8 நாட்கள் அங்கிருந்து ஆய்வுகளை மேற்கொள்வது. ஆனால், ஸ்டார்லைனரில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்படவே சுனிதா, வில்மோர் அங்கேயே தங்கும் நிலை ஏற்பட்டது.

8 நாட்கள் பயணம் 9 மாதங்களானது இதனால்தான். இந்த 286 நாட்களில் சுனிதாவும் வில்மோரும் விண்வெளியில் 121 மில்லியன் ஸ்டாட்யூட் மைல் பயணித்துள்ளனர். ஒரு ஸ்டாட்யூட் மைல் என்பது கிட்டத்தட்ட 5,280 அடி எனக்கொள்ளலாம்.

போயிங் நிறுவனத்துக்காக விருந்தாளியாக சென்ற அவர்கள், விண்வெளியில் சிக்கியதால் எப்போது பூமிக்குத் திரும்புவர் என்ற கேள்வி எழுந்தது. அவர்களுடைய உடல்நிலை தொடர்பான கேள்விகளும் எழுந்தன. ஆனால், இருவரும், விண்வெளி மையத்தில் தங்கியிருந்தபோது, தங்களுடைய பணிகளை மேற்கொண்டனர்.

பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் அவர்களை பூமிக்கு அழைத்து வர முடியவில்லை. அடுத்த குழுவை விண்வெளிக்கு அனுப்பும்போது மட்டுமே சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் திரும்ப வேண்டிய சூழல் ஏற்பட்டது. இவர்களை திரும்ப அழைத்து வருவதற்காகவே கடந்த செப்டெம்பர் மாதம் 4 வீரர்களுக்கு பதிலாக 2 வீரர்கள் மட்டும் விண்வெளிக்கு அனுப்பப்பட்டனர்.

அந்த 2 வீரர்களுடன், சுனிதா, வில்மோர் இருவரும் பெப்ரவரி மாதம் பூமிக்குத் திரும்புவார்களென நாசா அறிவித்தது. ஆனால், ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் விண்கலத்தில் ஏற்பட்ட சில தொழில்நுட்ப கோளாறு காரணமாக 'க்ரூ-10' குழு புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டது.

9 மாதமாக விண்வெளியில் சிக்கிய சுனிதா வில்லியம்ஸ், வில்மோரை பூமிக்கு அழைத்து வர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ஸ்பேஸ்எக்ஸ் நிறுவுநர் எலான் மஸ்க் அதிக முக்கியத்துவமளித்தனர்.

இதைத் தொடர்ந்து, தொழில்நுட்பக் கோளாறு சரிசெய்யப்பட்டு, புதிய 4 வீரர்களுடன் டிராகன் விண்கலம் பால்கன்-9 ரொக்கெட் மூலமாக கடந்த 15ஆம் திகதி புளோரிடாவின் கென்னடி ஏவுதளத்திலிருந்து



வெற்றிகரமாக ஏவப்பட்டது. இது, அடுத்த நாள் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை சென்றடைந்தது. அங்கு சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட வீரர்கள் புதிய குழுவினரை மகிழ்ச்சியுடன் வரவேற்ற புகைப்படங்கள், வீடியோக்களை நாசா வெளியிட்டது.

இந்நிலையில், திட்டமிட்டபடி க்ரூ-10 குழுவினர் டிரகன் விண்கலம் மூலம் பூமிக்குத் திரும்பும் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் (18) காலை தொடங்கின. இந்திய நேரப்படி காலை 8.15 மணிக்கு சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர், கடந்த செப்டெம்பர் மாதம் விண்வெளிக்குச் சென்ற வீரர்கள் நாசாவின் நிக் ஹக் மற்றும் ரஷ்யாவின் அலெக்சாண்டர் கோர்புனாவ் ஆகியோர் வெள்ளை கவச உடைகளை அணிந்து டிராகன் விண்கலத்தில் ஏறினர்.

இதனையடுத்து விண்வெளி மையத்தில் புதிய வீரர்கள் அவர்களை வழியனுப்பி வைத்தனர். காலை 10.35 மணிக்கு டிராகன் விண்கலம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து பிரிந்து பூமியை நோக்கி தனது பயணத்தைத் தொடங்கியது.

**17 மணிநேர பயணம்**

இந்நிலையில், நேற்றுமுன்தினம் (18) காலை 8.15மணிக்கு சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட 4 வீரர்களும் டிரகன் விண்கலத்துக்குள் சென்றனர். காலை 10.35 மணிக்கு டிராகன் விண்கலம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து பிரிந்து பயணத்தைத் தொடங்கியது.

இதனையடுத்து நேற்று (19) அதிகாலை 2.41 மணியளவில் விண்கலம் அதன் சுற்றுப்பாதையிலிருந்து பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழைந்தது. அதிகாலை 3.27மணியளவில் விண்கலத்தின் வேகம் குறைந்து, பெராசூட்கள் மூலம் விண்கலம் பாதுகாப்பாக புளோரிடா மாகாணம் டல்லஹாசி அருகே கடலில் கடலில் தரையிறங்கியது. இது ஸ்பிலாஷ்டவுன் எனப்படுகிறது.

கடலில் விழுந்ததும், பந்துபோல் மிதந்து வந்த விண்கலத்திலிருந்து அவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர். பின்னர் அவர்கள், வழக்கமான மருத்துவ பரிசோதனைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். வீரர்கள் வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பியமை நாசா விஞ்ஞானிகளையும் மக்களையும் மகிழ்ச்சியடைய வைத்துள்ளது.

**அடுத்த 45 நாட்கள்...**

தொடர்ச்சியாக பல மாதங்கள் விண்வெளி யில் இருந்துவிட்டதால் கை, கால் செயற்பாடு களில் சிரமம், தலை சுற்றல், தசை சிதைவு உள்ளிட்ட பல்வேறு உபாதைகளுக்கு விண்வெளி வீரர்கள் ஆளாகக்கூடும் என்பதால் சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட 4 பேரும் ஹூஸ்டனிலுள்ள நாசா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் ஓரிரு தினங்களில் குடும்பத்தினரைச் சந்திக்க அவர்கள் அனுமதிக்கப்படுவர். அதன் பின்னர் 45 நாட்கள் வரை அந்த மருத்துவமனையிலேயே தங்கி மறுவாழ்வு சிகிச்சைகளைப் பெறுவர்.

# மீன்களைக் கொல்ல யானைவெடிகளைப் பயன்படுத்துகின்றனரா?

## கண்காணிக்க அதிரடி நடவடிக்கை எடுக்குமாறு கண்டி மாவட்ட செயலாளர் ஆலோசனை

(எம்.ஏ.அமீனுல்லா)

விவசாய நிலங்களைப் பாதுகாக்க விவசாயிகளுக்கு வழங்கப்படும் யானைவெடிகளை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதைக் கண்காணிக்க அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீன்களைக் கொல்வதற்கு மேற்படி விவசாயிகளுக்கு வழங்கப்படும் யானைவெடிகள் பயன்படுத்தப்படுவதாகப் கிடைத்துள்ள புகார்களைப் பரிசீலித்த பின்னர் பிறர் கைகளில் யானை வெடிகள் சிக்குவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கண்டி மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்த மினிபே வில்கமுவ பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மினிபே பிரதேச செயலகத்தில் அண்மையில் (17) நடைபெற்ற பிரதேச விவசாயிகளுடனான சந்திப்பின்போதே கண்டி மாவட்ட செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

காட்டு யானைகளிடமிருந்து விளைநிலங்களைப் பாதுகாக்க விவசாயிகளுக்கு வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் ஒரே நேரத்தில் இரண்டு யானை வெடிகளை வழங்குவதாகவும் தேசிய அடையாள அட்டை வழங்கும் விவசாயிகளுக்கு மட்டுமே இது வழங்கப்படுமென்றும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் கண்டி மாவட்ட வனவிலங்கு பாதுகாவலர் ஏ. மஹிந்த விஜேசிங்க இங்கு தெரிவித்தார்.

வனவிலங்கு அதிகாரிகள் இரவு நேர கண்காணிப்புப் பணியில் ஈடுபடுகின்ற பொழுது பயிர்களைப் பாதுகாக்கும் விவசாயிகளுக்கு யானை வெடிகளை வழங்குவதாகவும் சிலர் இந்த யானை வெடிகளை தவறாகப் பயன்படுத்தி மீன்களைக் கொல்லப் பயன்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

வனஜீவராசிகள் திணைக்களத்தால் முன்வைக்கப்பட்ட விடயங்களைப் பரிசீலித்த மாவட்ட செயலாளர், வில்கமுவ பிரதேச செயலாளர் எச்.எம்.இலுகா சிறிவர்தன மற்றும் மினிபே பிரதேச செயலாளர் ஏ.டி.திலகரத்ன ஆகியோருக்கு, விவசாயிகளின் நிரந்தர வதிவிடத்தைக் கருத்திற்கொண்டு யானை வெடிகள் விநியோகிப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்காலத்தில் பிரதேச செயலகங்களின் நிர்வாகத்துக்கு வழங்கப்படுமெனவும் மாவட்ட செயலாளர் அங்கு பிரதேச செயலாளர்களின் கவனத்துக்கு தெரியப்படுத்தினார்.

மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன, கண்டி மேலதிக மாவட்ட செயலாளர் நிலுகா புலத்கே, கண்டி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சுதத் கமகே, மினிபே வதிவிட முகாமையாளர் எஸ்.எச்.எல்.தயாபால, ஐக்கிய தேசிய விவசாயிகள் அமைப்புத் தலைவர் சுனில் கமகே உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



குருநாகல் முஸ்லிம் வர்த்தக சங்கத்தினால் குருநாகல் போதனா வைத்தியசாலையின் குடற்புண் நோய் சிகிச்சைப் பிரிவுக்கு 15 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. முஸ்லிம் வர்த்தக சங்கத் தலைவர் எம். வை. எம். கியாஸ் தலைமையில் பணிப்பாளர் வைத்தியர் மிஹிரி பிரியங்கனி முன்னிலையில் பணிப்பாளரின் அலுவலகத்தில் இது தொடர்பான நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது குருநாகல் போதனா வைத்தியசாலையின் குடற்புண் சிகிச்சைப் பிரிவுக்குப் பொறுப்பான வைத்திய நிபுணர் நந்தனவிக்கிரம ஆரச்சி, வைத்தியர்களான மலீக், அவ்கான், குருநாகல் வர்த்தக சங்கச் செயலாளர் எம். மில்ராஜ், பொருளாளர் இர்பான், அமைப்பாளர் பாரிஸ், தாதிமார்கள், வைத்தியர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (இக்பால் அலி)

# நுவரெலியாவில் வைத்தியசேவைக்கு இடையூறு விளைவித்த மேஜர் கைது

(டி.சந்ரு, செ.திவாகரன், நானுஓயா நிருபர்)



நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் திடீரென உள்நுழைந்து வைத்திய சேவைக்கு இடையூறு ஏற்படுத்தி வன்முறையில் ஈடுபட்ட முன்னாள் இராணுவ மேஜர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர் .

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகத்துக்குரிய மேஜர், விடுமுறைக்காக நுவரெலியாவுக்கு சென்றிருந்த நிலையில் பலத்த காயங்களுடன் நேற்று முன்தினம் (18) நுவரெலியா மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்றபோது வைத்தியசாலையில் அனுமதிக்கும் பிரிவில் பணிபுரியும் ஊழியர்களோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டு தகாத வார்த்தைப்பிரயோகங்களைக்கூறி வைத்திய சேவைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளார்.

பின்னர் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் மகேந்திர செனவிரத்ன சம்பவ இடத்துக்குச் சென்றபோது அவரோடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து வைத்தியசாலையில் நுழைந்து குழப்பத்தை ஏற்படுத்தியதாக வைத்தியசாலை நிர்வாகம் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து நுவரெலியா பொலிஸாரால் கைதுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சம்பவம் தொடர்பில் நுவரெலியா மாவட்டப் பொது வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் மகேந்திர செனவிரத்னவிடம் வினவியபோது,

''அவர் நுவரெலியாவில் ஏதோ ஒரு இடத்தில் தங்கியிருந்து கீழே விழுந்து பலத்த காயங்களுடன் வைத்தியசாலைக்கு வருகை தந்து இராணுவ மேஜர் எனக் கூறிக்கொண்ட நிலையில், ஆரம்பப் பிரிவில் அனுமதிக்கும்போது கனிஷ்ட ஊழியரொருவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வைத்திய சேவைகளுக்கும் இடையூறை ஏற்படுத்திய காரணத்தால் குறித்த நபரை கைது செய்த பொலிஸார் அவரைப் பாதுகாப்புடன் நுவரெலியா மாவட்டப் பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதனையடுத்து குறித்த நபர் சிகிச்சை பெற்று வருவதோடு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## குருநாகல் மாவட்ட செயலாளராக சந்தன திசாநாயக்க



(இக்பால் அலி)

குருநாகல் மாவட்ட செயலாளராக சந்தன திசாநாயக நியமிக்கப்பட்டுள்ளார்.

2000ஆம் ஆண்டு இலங்கை அரச நிர்வாக சேவையின் கீழ் இணைந்து கொண்ட இவர் கந்தளாய் பிரதேச செயலக உதவிச் செயலாளராகவும் தம்புள்ளை, கலேவெல பிரதேச செயலக உதவிச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன்,விவசாயத்துறை அமைச்சின் உதவிச் செயலாளராகவும் வடமேல் மாகாண கூட்டுறவுத்துறை மற்றும் காணி ஆணையாளராகக் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலவச இதய சத்திரசிகிச்சை முகாம்

(கொட்டகலை நிருபர்)



நுவரெலியா, கொட்டகலை, டிக்கோயா ஆகிய இடங்களில் நாளை 21 முதல் 23 ஆம் திகதி வரை இலவச இதய சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்காகக் காத்திருப்போருக்கு இலவச இதய சத்திர சிகிச்சையை மேற்கொள்ள கனடாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் நிவாரண அமைப்பின் ஸ்தாபகர் - பாடகர் செந்தில் முன்வந்திருக்கிறார்.

இதுவரை இலங்கையில் வசதி குறைந்த 130 க்கும் மேற்பட்டவர்களுக்கு சத்திரசிகிச்சைகளுக்கான அனைத்து உதவிகளையும் அவர் இலவசமாக வழங்கிவரும் நிலையில், தற்சமயம் மலையகத்தின் பக்கம் தன்னுடைய இலவச சேவைக்கான களத்தை ஆரம்பித்திருக்கிறார்.

உங்கள் பிள்ளை அல்லது 45 வயதுக்குட்பட்ட எவரேனும் இருதய நோயால் பாதிக்கப்பட்டு சத்திரசிகிச்சை செய்யவேண்டியவராக இருப்பின், இலவசமாக சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்கு பாடகர் செந்தில் உதவ முன்வந்திருக்கிறார்.

அதற்கமைய மேற்படி வரையறைக்குட்பட்டிருப்போர், நாளை வெள்ளிக்கிழமை(21) ஹாவா எலிய, ஸ்ரீமுத்துக்குமாரியம்மன் கோவில் மண்டபத்திலும் சனிக்கிழமை (22) கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திலும் ஞாயிற்றுக்கிழமை (23) டிக்கோயா பொதுவைத்தியசாலையிலும் குறிப்புகளுடன் சென்று செந்திலைச் சந்திப்பதன் மூலம் அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது முற்றிலும் இலவசமான சேவை. உங்கள் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தேவையுடைய இருதய நோயாளிக்கு இலவச சத்திர சிகிச்சை வழங்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார். தொடர்புகளுக்கு-0760541771



அக்குறணை பிரதேச செயலகம் நடத்திய இப்தார் நிகழ்வு அக்குறணை அரபா கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் ருவன்திகா குமாரி ஹென்நாயக்க தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கண்டி மாவட்ட மேலதிக செயலாளர் கலந்துகொண்டு சிறப்பித்தார். இந்நிகழ்வில மத்திய மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் தாரிக் அலி, அக்குறணை பிட்டிகே பிட்டிய ரஜமஹா விஹாரை விஹாராதிபதி நந்தரத்ன தேரர், அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபைத் தலைவர் மௌலவி ஏ. எம். எம். சியாம், அக்குறணை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ஐ. ஜனுடீன், முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன், பூஜாப்பிட்டிய பிரதேச செயலாளர், வங்கி முகாமையாளர்கள் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (இக்பால் அலி)

# வடமாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வினைத்திறனாகவும் விரைவாகவும் பயன்படுத்துவது குறித்து கலந்துரையாடல்

(யாழ். நிருபர்)

வடக்கு மாகாணத்துக்கு அதிகளவான நிதி பல்வேறு வகையிலும் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை வினைத்திறனாகவும் ஒருங்கிணைத்தும் விரைவாகவும் பயன்படுத்தி நிறைவேற்றுவது தொடர்பான விசேட கலந்துரையாடல் கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் இ.சந்திரசேகரன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் இணைத் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் (18) செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.



கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

''வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களத்தால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் பாதிப்பிருந்தாலும் வடக்கு மாகாணத்திலேயே அதிகூடிய பாதிப்பிருக்கின்றது.

மக்களின் மீள்குடியமர்வு, விவசாயம், அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு இடையூறாக இந்த இரு திணைக்களங்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

வடமாகாணம் கால்நடை உற்பத்தித் துறையில் மிகச் சிறந்த நிலையில் உள்ளபோதும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இல்லாமலிருப்பது பெரும் பின்னடைவு. சட்டவிரோதமான மணல் அகழ்வு மிகப்பெரிய பிரச்சினையாகவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும். ஆளணிகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். இது தொடர்பில் அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லவேண்டும்'' - என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இ.சந்திரசேகரன்,

''மாகாண சபைக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்துத் திணைக்களங்களும் ஒருங்கிணைந்து இதைச் செலவு செய்யவேண்டும் .

மேலும், வெளிநாடுகளிலிருந்து முதலீட்டாளர்கள் அதிகளவில் வருகைதரும் நிலையில், அவர்களுக்கு ஒத்துழைப்புகளை அதிகாரிகள் வழங்கவேண்டும்''- எனவும் ஆலோசனை வழங்கினார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர்,

மாகாணத்துக்கான நிதிமூலங்கள், அதற்கான அனுமதிக்கான நடைமுறைகள் தொடர்பில் விரிவாகக் கூறியதுடன், இந்த ஆண்டு மாகாண சபைக்கு 7,328 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், தமது அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பாகவும் முன்னெடுக்கப்படவுள்ள வேலைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தினார். இதன் பின்னர் கல்வித்துறையிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களில் அநேகர் மேன்முறையீடு செய்துள்ளதாக ஆளுநர் மற்றும் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுசென்றார். இதன்போது ஆளுநரும் அமைச்சரும் இரு விடயங்களைச் சுட்டிக்காட்டினர்.

ஒருபோதும் வெளிமாவட்டங்களில் பணியாற்றாதவர்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்லத்தான் வேண்டுமெனவும் மேன்முறையீடுகளை ஒவ்வொன்றாக ஆழமாக ஆராயுமாறும் குறிப்பிட்டனர்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் அதன் பின்னர் தமது அமைச்சு, திணைக்களங்களுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பில் விளக்கமளித்தார்.

மருத்துவமனைகளில் நிலவும் வெற்றிடங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

விவசாய அமைச்சின் செயலாளர் மற்றும் விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோர் நிதி ஒதுக்கீடுகள் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் தெரியப்படுத்தினர்.

வடக்கு மாகாணத்துக்குரிய சில சிறுபயிர்களுக்கு இலவசக் காப்புறுதி இன்னமும் இல்லையென்றும் அதைப் பெற்றுக்கொடுத்தால் விவசாயிகள் அதிகளவில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவரெனவும் குறிப்பிட்டனர். அதேபோன்று, சிறுதானியப் பயிர்ச்செய்கைக்கும் உரமானியம் வழங்கினால் விவசாயிகள் ஆர்வத்துடன் அதை முன்னெடுக்க உதவியாக இருக்குமெனவும் தெரிவித்தனர்.

உள்ளூராட்சி அமைச்சின் செயலர், தமது அமைச்சால் இம்முறை முன்னெடுக்கபடவுள்ள டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்தார். அத்துடன், அரசாங்கம் ஒதுக்கியுள்ள விசேட நிதியில் முன்னெடுக்கப்படவுள்ள வீதிகளின் முன்னுரிமைப்பட்டியலை வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் சமர்ப்பித்தார்.

இறுதியாக மகளிர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் வேலைத்திட்டங்கள் தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், பிரதம செயலாளர், பிரதி பிரதம செயலாளர் - நிர்வாகம், நிதி, திட்டமிடல், பொறியியல் , அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஆழியவளை கடற்றொழிலாளர் சங்கத்தில் பாரிய மோசடி

### பயனாளிகளுக்கு அநீதி!

(யாழ். நிருபர்)

ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினருக்கு கடந்த வருடம் (2024) வழங்கப்பட்ட 2,97,000 ரூபா பெறுமதியான 15 இரட்டைவலைகளை பயனாளிகளுக்குக் கொடுக்காமல் மோசடி செய்யப்பட்டமை அம்பலமாகியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, 2024 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதியொதுக்கீட்டில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் நிதியிலிருந்து 2,97,000 ரூபா ஆழியவளை கடற்றொழிலாளர் சங்கத்துக்கு ஒதுக்கப்பட்டு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமூடாக 15 இரட்டை வலைகள் ஆழியவளை கடற்றொழிலாளர் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த வருடம் (2024) ஒப்படைக்கப்பட்ட வலைகளை ஆழியவளை கடற்றொழிலாளர் சங்க நிர்வாகம் இரகசியமாகப் பெற்று பயனாளிகளுக்குக் கொடுக்காமல் மோசடி செய்தமை தற்பொழுது அம்பலமாகியுள்ளது.

வலைகளைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளின் விபரத்தைக் கோரி பிரதேச செயலகம் அனுப்பிய கடிதத்தின் பின்னரே குறித்த மோசடி வெளிப்பட்டுள்ளது.

இது குறித்து ஆழியவளை கிராம சேவகரைத் தொடர்புகொண்டு வினவியபோது, ''கடந்த வருடம் (2024) ஆழியவளை கடற்றொழிலாளர் சங்கத்தினரிடம் 2,97,000 ரூபா பெறுமதியான வலைகள் ஒப்படைக்கப்பட்டமை உண்மை.

அத்துடன், வலை பெற்றமையானது மீனவர்கள் யாருக்கும் தெரியாதென்ற முறைப்பாடு எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது'' - என்றார்.

பாரிய மோசடியில் ஈடுபட்ட ஆழியவளை கடற்றொழிலாளர் சங்க நிர்வாகம் மீது உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஆழியவளை மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யாழ். மாவட்டத்தில் 11,081 குடும்பங்கள் காணிகளை வழங்குமாறு கோரிக்கை

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காணியற்ற 11 ஆயிரத்து 81 குடும்பங்கள் தமக்குக் காணிகளை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, கடந்த 2024 மற்றும் 2025ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 823 குடும்பங்களும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 796 குடும்பங்களும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 828 குடும்பங்களும் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 342 குடும்பங்களும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 568 குடும்பங்களும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 730 குடும்பங்களும் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 456 குடும்பங்களும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 855 குடும்பங்களும் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 176 குடும்பங்களும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 526 குடும்பங்களும் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில் 256 குடும்பங்களும் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 589 குடும்பங்களும் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 109 குடும்பங்களுமென யாழ். மாவட்டத்தில் 11 ஆயிரத்து 81 குடும்பங்கள் தமக்கு காணிகளை வழங்குமாறு யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்திடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன.

இவற்றில், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 2 குடும்பங்களுக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 38 குடும்பங்களுக்கும் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 22 குடும்பங்களுக்கும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 85 குடும்பங்களுக்கும் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் பிரிவில் 26 குடும்பங்களுக்கும் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 72 குடும்பங்களுக்குமென மொத்தமாக 352 குடும்பங்களுக்கு இவ்வாறு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. 10 ஆயிரத்து 729 குடும்பங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.

# மன்னாரில் கட்டுப்பணம் செலுத்தியது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை மற்றும் நான்கு பிரதேச சபைகளில் போட்டியிட நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (18) மன்னார் தேர்தல் திணைக்களத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது.

வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் தலைமையில் மன்னார் நகர சபை மற்றும் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு பிரதேச சபைகள் உள்ளடங்கலாக 5 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை உறுப்பினர்கள் செலுத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மன்னார் நகர சபைத் தேர்தலில் தராசு சின்னத்தில் ஐக்கிய தேசியக் கூட்டமைப்பிலும் ஏனைய மன்னார், நானாட்டான், முசலி மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபைத் தேர்தல்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மரம் சின்னத்திலும் போட்டியிடவுள்ளன - என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக் தெரிவித்தார்.

# தண்ணீர்ப்பம்பி திருட்டில் ஈடுபட்டவருக்கு விளக்கமறியல்

(யாழ். நிருபர்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் - வேரம் பகுதியிலுள்ள வீடொன்றில் தண்ணீர்ப்பம்பி திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர் பம்பியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த பகுதியிலுள்ள வீட்டில் 3 பெண்கள் தனியாக இருந்தவேளை கடந்த திங்கட்கிழமை (17) அதிகாலை குறித்த சந்தேகநபர் அந்த வீட்டில் உள்ள களஞ்சியசாலையின் ஓட்டைப் பிரித்து இறங்கி பம்பியைத் திருடியுள்ளார். இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில், தீவிர விசாரணைகளை மேற்கொண்ட வட்டுக்கோட்டைப் பொலிஸார் அதே பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேகநபரொருவரைக் கைதுசெய்து விசாரித்ததன் அடிப்படையில் பம்பியை மீட்டனர்.

பின்னர் அவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தியவேளை அவர் போதைவஸ்துக்கு அடிமையானவர் என்ற விடயம் மருத்துவ அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், குறித்த சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறும் விளக்கமறியல் முடிவடைந்த பின்னர் புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

# சம்பியன்ஸ் கிண்ணம் மூலம் 10 கோடி அமெரிக்க டொலரை இழந்துள்ள PCB

ICC CHAMPIONS TROPHY 2025 • PAKISTAN

அண்மையில் நிறைவடைந்த சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரை நடத்திய பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு 10 கோடி அமெரிக்க டொலர் (இலங்கை மதிப்பில் 2,966 கோடி) இழப்பு ஏற்பட்டுள்ளது. பாக். கிரிக்கெட் சபையின் அறிக்கைப்படி அவர்களது முதலீட்டில் 85 சதவீதம் இழப்பு ஏற்பட்டுள்ளது.

பாக். கிரிக்கெட் சபையானது போட்டிக்குத் தயாராக 4 கோடி டொலரும் மைதானங்களை தயார் செய்ய 5.8 கோடி டொலரும் செலவு செய்தது. இவ்வளவு செலவு செய்தும் பாகிஸ்தான் அணி சொந்த மண்ணில் ஒரு போட்டியில் மட்டுமே விளையாடியது. ஒரு போட்டி மழையால் இரத்தானது. இதன் காரணமாக ஏனைய போட்டிகளைக் காண ரசிகர்கள் ஆர்வம் காட்டவில்லையென்று கூறப்படுகிறது.

இந்தத் தொடர் மூலம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு 60 இலட்சம் டொலர் மட்டுமே கிடைத்தது. இவை ஐ.சி.சி. வழங்கிய கட்டணம், டிக்கெட், விளம்பரம் ஆகியவை மூலம் கிடைத்தன. இந்த நிலையில், பாரிய இழப்பைச் சமாளிக்க தேசிய ரி20 போட்டியில் விளையாடும் வீரர்களின் சம்பளத்தில் 90 சதவீதத்தைக் குறைத்துள்ளது. இதன்மூலம் ஒரு கோடி ரூபா சம்பளம் பெற்ற ஒரு வீரர் ரூ.10 இலட்சம் மட்டுமே பெறுவார்.

# விளையாட்டுத் துளிகள்

**இந்தியாவில் நடைபெற்ற 6 அணிகள் பங்கேற்ற முதலாவது சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடரில் வெஸ்ட் இன்டீஸை வீழ்த்தி இந்தியா சம்பியன் பட்டம் வென்றது. இந்தத் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணிக்கு ஒரு கோடி ரூபாவும் 2ஆவதாக இடம் பிடித்த வெஸ்ட் இன்டீஸுக்கு ரூ. 50 இலட்சமும் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளன.**

**கொல்கத்தா அணியில் இடம் பிடித்திருந்த இளம் வேகப்பந்து வீச்சாளரான உம்ரான் மாலிக் உபாதை காரணமாக நடப்பு ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக இடதுகை வேகப்பந்து வீச்சாளரான சேத்தன் சக்காரியா கொல்கத்தா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.**

**நியூசிலாந்துடனான முதல் போட்டியில் நியூசிலாந்து பந்துவீச்சாளர் ஸகாரி பால்க்ஸை வேண்டுமென்றே மோதியதாக குஷ்தில் ஷா மீது குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் அவருக்கு போட்டிக் கட்டணத்திலிருந்து 50 சதவீதம் அபராதம் விதிப்பதுடன், மூன்று தகுதி இழப்பீட்டு புள்ளிகளையும் விதிப்பதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது. இந்நிலையில் இவர் கடந்த 24 மாதங்களில் செய்த முதல் குற்றம் இது என்பதால் அபராதம் மட்டும் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது.**

**டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியின் உப தலைவராக அனுபவ வீரர் பெப் டு பிளெசிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த ஆண்டுவரை ஆர்.சி.பி. அணியின் தலைவராக செயற்பட்டிருந்த போதும், மெகா ஏலத்தில் அவரை ஆர்.சி.பி. அணி வாங்குவதற்கு முன்வரவில்லை. டில்லி அணியின் தலைவராக அக்ஷர் பட்டேல் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

**1967 முதல் 1974 ஆம் ஆண்டு வரை இந்திய அணிக்காக டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் ஆடிய சையத் அபிட் அலி தனது 83 ஆவது வயதில் காலமானார். இவர் கலிபோர்னியாவில் இயற்கை எய்தினார். இவர் 53 டெஸ்ட் போட்டிகளிலும் 1974-75 இடையே 5 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் ஆடினார்.**

# இம்ரான் கானின் கைதி இலக்கத்தை எழுதிய பாக். வீரர் ஜமாலுக்கு அபராதம்




பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான அமீர் ஜமால், தனது டெஸ்ட் தொப்பியில் 804 என்ற எண்ணை எழுதியதற்காக அந்நாட்டு கிரிக்கெட் சபை 4,000 டொலர் அபராதம் விதித்திருக்கிறது.

கடந்த ஆண்டு ஒக்டோபரில் இங்கிலாந்துக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியின்போது, அமீர் ஜமால் 804 என்ற நம்பர் எழுதப்பட்டிருந்த தொப்பியை அணிந்திருந்தார். இந்த 804 என்ற எண்ணானது, சிறையிலிருக்கும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் பாகிஸ்தானுக்கு ஒருநாள் உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்தவருமான இம்ரான் கானின் கைதி இலக்கத்தைக் குறிக்கிறது.

இதனால், கிரிக்கெட்டில் அரசியலைக் கொண்டுவந்து இம்ரான் கானை ஆதரித்ததாக அமீர் ஜமாலுக்கு இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# இண்டியன்வெல்ஸ் சம்பியனான பிரிட்டனின் ஜேக் டிராப்பர், ரஷ்யாவின் மிர்ரா ஆண்ட்ரீவா



அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்ற இண்டியன்வெல்ஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஜேக் டிராப்பர் சம்பியன் பட்டம் வென்றார். மகளிர் ஒற்றையர் பிரிவில் நட்சத்திர வீராங்கனை சபலென்காவை வீழ்த்தி மிர்ரா ஆண்ட்ரீவா சம்பியன் பட்டத்தை வென்றார்.

பல முன்னணி வீர, வீராங்கனைகள் பங்கேற்றிருந்த குறித்த இண்டியன்வெல்ஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் தொடர் கடந்த 03ஆம் திகதி ஆரம்பமானது. இந்தத் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் பிரிட்டனின் ஜேக் டிராப்பர் மற்றும் டென்மார்க்கின் ஹோல்கர் ரூனே ஆகியோர் மோதினர். இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே அபாரமாக செயற்பட்ட டிராப்பர் 6-2, 6-2 என்ற நேர் செட் கணக்கில் ஹோல்கர் ரூனேவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார்.

மகளிர் பிரிவில் ரஷ்யாவின் மிர்ரா ஆண்ட்ரீவா, நம்பர் 1 வீராங்கனையான பெலாரசின் அரினா சபலென்காவுடன் மோதினார். ஆரம்பம் முதலே பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முதல் இரு செட்களை இருவரும் மாறி மாறி கைப்பற்றினர். மூன்றாவது செட்டில் அபாரமாக செயற்பட்ட மிர்ரா ஆண்ட்ரீவா 6-3 என்ற புள்ளிக்கணக்கில் சபலென்காவை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார்.

# ஆசியக்கிண்ண உதைபந்து தகுதிகாண் சுற்றுப்போட்டி அட்டவணை வெளியீடு

2027ஆம் ஆண்டு சவூதி அரேபியாவில் நடைபெறவுள்ள ஆசிய உதைபந்து சம்மேளனத்தின் ஆசியக் கிண்ணத் தொடரின் மூன்றாம் மற்றும் இறுதி சுற்றுத் தகுதிகாண் போட்டிகளுக்கான அணி நிரல்படுத்தல்கள் மற்றும் போட்டி அட்டவணை என்பன வெளியிடப்பட்டுள்ளன.




மூன்றாம் சுற்றுக்கான தகுதிகாண் போட்டிகளில் மொத்தம் 24 அணிகள் ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு மோதல்கள் இடம்பெறவிருக்கின்றன. இதில் இலங்கை குழு டி இல் தாய்லாந்து, துர்க்மேனிஸ்தான் மற்றும் சீனா தாய்பேய் ஆகிய நாடுகளுடன் இடம்பெற்றுள்ளது.

மூன்றாம் சுற்றுக்கான போட்டிகள் இம்மாதம் 25ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாவதோடு இலங்கை தமது முதல் போட்டியில் தாய்லாந்தை அவர்களது சொந்த மண்ணில் வைத்து எதிர்கொள்ளவிருக்கின்றது.

இலங்கையின் போட்டி அட்டவணை

மார்ச் 25, 2025 – தாய்லாந்து (எதிரணி மைதானம்)

ஜூன் 10, 2025 – சீனா தாய்பேய் (சொந்த மைதானம்)

ஒக்டோபர் 09, 2025 – துர்க்மெனிஸ்தான் (சொந்த மைதானம்)

ஒக்டோபர் 14, 2025 – துர்க்மெனிஸ்தான் (எதிரணி மைதானம்)

நவம்பர் 18, 2025 – தாய்லாந்து (சொந்த மைதானம்)

மார்ச் 31, 2026 – சீனா தாய்பேய் (எதிரணி மைதானம்)

# மண்முனை வடக்கு பிரதேச செயலகம், வந்தாறுமுலை மத்திய மகா வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு




***(மட்டக்களப்பு நிருபர்)***

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் இடம்பெற்ற மாபெரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மண்முனை வடக்கு பிரதேச செயலக அணியினரும் வந்தாறுமுலை மத்திய மகா வித்தியாலய அணியினரும் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு “நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக - அவள் வலுவான வழிகாட்டியாக இருப்பாள்” எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகள் மற்றும் மாவட்ட செயலக, பிரதேச செயலகம் என்பவற்றுக்கிடையே வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்றது.

மட்டக்களப்பு வெபர் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றுவந்த போட்டி நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி ஜஸ்டினா முரளீதரன் கலந்துகொண்டு போட்டியில் வெற்றி பெற்ற அணியினருக்கு சான்றிதழ்கள், நினைவுச்சின்னம் மற்றும் பணப் பரிசில்கள் என்பவற்றை வழங்கினார்.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7